# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜூன் - 2017

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## பாரம்பரிய விதைத் திரு(ட்டு) விழாக்கள்

## தமிழ் இலக்கண - இலக்கியங்களில் வர்ணாஸ்ரமம்

## பெரியார்–அம்பேத்கர்: படம் தேவையா? பாடம் தேவையா?



#Boycott Cooking

Boycott

Ban ear piercing function for children which inculcates the fact that girls are meant to be beauty idols only.

Ban puberty function which degrades women moral.





Prohibit the separate seating arrangement of boys and girls from primary to higher secondary education in all educational institutions and Implement seating arrangement according to alphabetical order.

Actualize co-hostel or unisex hostel system in all educational institutions as followed in New Delhi JNU university,AIIMS  and other higher educational institutions. Include gender education in the syllabus from primary education.





Ban fairness cream production..Obsession of the thought fair skin is beauty must be broken.

Ban jewelry, silk and flower merchandise which promotes beauty tradition. Strictly ban mulberry production and floriculture.

Boycott

24.12.2017

#Boycott Kitchen

புலவர் கோ.இமயவரம்பன்

# தமிழ் இலக்கண - இலக்கியங்களில் வர்ணாஸ்ரமம்

"தமிழனுக்குத் தெளிவான இலக்கியமோ, வரலாறோ இல்லை. இன்று இருக்கும் இலக்கியங் களிலும் கூட கலப்பற்ற "தமிழர் பண்பாடு" என்பது காணமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது. அவைகளில் பெரிதும் ஆரியக்கடவுள், மதம், சாதிப் பழக்க வழக்கங்கள் கொண்ட கருத்துக்களே பரவலாகக் காணக்கிடக்கின்றன" என்பது தமிழர்தம் ஒரே பாதுகாவலரான தந்தை பெரியார் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான மேடை களில் இலட்சக்கணக்கான மக்கள் முன்பு எடுத்து உரைத்துவரும் கருத்துக்களாகும்.

இக்கருத்துக்களுக்குச் சான்று பகிர்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். திராவிடர் கழகத்துக் காரர்களுக்கு அதாவது சுயமரியாதைக் காரர்களுக்கு மக்கள் அறிவு வளர்ச்சி பற்றி நாட்டங் கொள்வதே முக்கியம் அன்றி, அறிவைத்தடை செய்யும் வகையில் மொழிப் பற்றோ, இலக்கியப் பற்றோ, நாட்டுப்பற்றோ மற்றும் எந்தப்பற்றோ தேவை இல்லை என்பதே கொள்கையாகும். பகுத் தறிவு உணர்ச்சியுடன் சுயமரியா தைக் கண்ணோட்டத்துடனுமே சங்க இலக்கியங்களின் தன்மை இந்தக் கட்டுரையில் ஆராயப்பட்டு இருக்கிறது.



நம் தமிழ் நாட்டில் பார்ப் பனர்களின் ஆதிக்கமும் வர்ணா சிரமக் கோட்பாடுகளும் பன்னெடு நாட்களுக்கு முன்னரேயே புகுந்து விட்டது எனலாம். அகத்தியர் போன்ற ஆரிய முனிவர் தமிழகம் வந்து, தமிழ் கற்று அதன் மூலம் தங்களது நச்சுக் கருத்துக்களை எல்லாம் புகுத்தி இருக்கின்றனர். இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள காலத்தால் முற்பட்ட நூலாகிய தொல்காப்பியத்தில் கூடப் பார்ப்பனர்தம் வர்ணாசிரமக் கருத்துக்கள் காணப்படுகின்றன என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வர்ணாசிரமப் பிரிவுகள் நான்கும் தொல்காப்பியத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பெயரில் காணப் படுகின்றன. இதனைப் தமிழ்ப்புலவர்கள் "அது எப்படி வர்ணாசிரமப் பிரிவுகளாகும் ! தொல் காப்பியர் கூறும் இந்த நான்கு பிரிவுகளும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப் பட்டனவே அல்லாது வர்ணாசிரமத்தை அடிப் படையாகக் கொண்டதல்ல" என்று வாதிடு கின்றனர்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் புறத்திணையியலில்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனர் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்"

(74ம் சூத்திரம்)

என வரும் சூத்திரத்திற்கு உரை எழுத வந்த இளம்பூரணர் கருத்தினை இங்கு காண்போம்.

**அறுவகைபட்ட பார்ப்பனர் பக்கம் :**
ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

**ஐவகை மரபின் அரசர் பக்கம் :**
ஓதலும், வேட்டலும், ஈதலும், படை வழங்குதலும், குடி ஓம்புதலும் ஆகும்.

**வணிகருக்குரிய அறு பக்கமாவன :**
ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வணிகம், நிரை யோம்பல்

**வேளாண் மாந்தர்க்குரிய ஆறு பக்கமாவக :**
உழவு, உழவு ஒழிந்த மற்ற தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தரல், ஏனைய மூவர் வழிபாடு வேதம் ஒழிந்த கல்வி

என்று கூறியுள்ளார்.

பார்ப்பன உரையாசிரியரான நச்சினார்க் கினியரும் இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் என்பதற்கு ஓதலும், வேட்டலும், ஈதலும், உழவும், நிரை ஓம்பலும், வணிகமும் ஆகிய அறுவகை இலக்கணத்தை உடைய வணிகப் பக்கமும் என்றும் வேதம் ஒழிந்த ஓதலும், ஈதலும், உழவும், நிரை ஓம்பலும், வணிகமும், வழிபாடும் ஆகிய அறுவகை இலக்கணத்தை உடைய வேளாளர் பக்கமும் என்றும் கூறுகின்றனர்.

இதிலிருந்து, நான்காம் வருணத்தனாகிய சூத்திரனுடைய தொழில் பார்ப்பானுக்குத் தொண் டூழியம் செய்வது என்பதைத் தான் உரையாசிரியர் கள் வழிபாடு என்ற பெயரில் குறிப்பிடுகின்றார்கள் என்பதையும், சூத்திரன் வேதத்தைப் படிக்கக் கூடாது என்று மனு நீதி கூறுவது போலவே இவர்கள் நான்காம் பிரிவினரான வேளாளன் வேதம் ஒழிந்த கல்வியைத்தான் கற்க அருகதை உடையவர் என்று கூறவதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

பண்டிதர்கள் கூறலாம் உரையாசிரியர்கள் செய்த குற்றத்திற்கு நாம் எப்படி தொல்காப்பியத் தையே குறை கூறுவது என்று!

"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே"

என்ற சூத்திரத்தில் அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று பிரிவினர்களுக்கும் உரியகாரணம் (சடங்குகள்) கீழோர்களாகிய வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் இருந்தது என்று குறிக்கின்றார்.

இது மட்டும் அல்ல : தொல்காப்பியத்தில் சிறு தெய்வ வணக்கங்கள், யூபம் நட்ட வேள்வி, அரசனைத் திருமாலுக்கு ஒப்பிட்டுச் சொல்லும் பூவை நிலை போன்ற ஆரியக் கருத்துக்கள் மலிந்துள்ளதை வேறு தனிக் கட்டுரையில் காண்போம். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் காலமாகிய கடைச்சங்க காலத்திலும், இந்த வர்ணாசிரமக் கொள்கை தமிழகத்தில் நன்கு வேர் ஊன்றி இருந்திருக்கின்றது. அவன் பாடிய புறநானூற்றுப் பாடலிலே,

**“ அகத்தியர் போன்ற ஆரிய முனிவர் தமிழகம் வந்து, தமிழ் கற்று அதன் மூலம் தங்களது நச்சுக் கருத்துக்களை எல்லாம் புகுத்தி இருக்கின்றனர்.**

“ வேற்றுமை தெரிந்த நாற்
பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவன்
அவன் கட்படுமே”

எனக்குறிப்பிட்டுள்ளான். மேலும் கபிலர் போன்ற பார்ப்பனப் புலவர்கள்,

“ யானோ மன்னும் அந்தணன் ” என்று இறுமாப்புடன் கூறிக்கொள்கின்றனர்.

சங்க காலத்தில் இறுதியில் இயற்றப்பட்ட சிலப்பதி காரத்தை அடுத்த படியாக நோக்குவோம்.

கோவலன், கண்ணகியையும் கவுந்தி அடிகளையும் புறஞ்சேரியில் வைத்துவிட்டுத் தான் மட்டும் மதுரை நகர் வீதிகளை எல்லாம் கண்டு மகிழ்ந்து திரும்புவதைக் கூறும் ஊர்காண் காதையில், மதுரை வீதிகளில் விற்கப்படும் ஒன்பது வகை மணிகளைப் பற்றிக் கூறும் பகுதியில் இளங்கோவடிகள் ஒன்பது வகை மணிகளில் ஒன்றான வைரத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிள்றார்.

“ காக பாதமும் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி இயல்பிற் குன்றா
நூலவர் நொடிந்த நுழை நுண்கொடி
நூல்வகை வருணத்து நலங்கேழ் ஒளியவும் ”

இதற்கு உரை எழுத வந்த உரையாசிரியர்கள் எல்லாம் நால்வகை வருணத்து ஒளியினைக் குறிக்க

“ அந்தணன் வெள்ளை அரசன் சிவப்பு
வந்த வைசியன் பச்சை சூத்திரன்
அந்தமில் கருமை என்றறைந்தனர் புலவர் ”

எனவரும் பரஞ்சோதி முனவரின் திருவிளை யாடற்புராணத்துத் திருவாலவாய்ப் படலத்தின் (25) செய்யுளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

இத்துடன் மட்டும் விட்டார்களா? இல்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இந்நான்கு வருணத்தாரும் தத்தமது வருணத்திற்கு உரிய மணிகளையே அணிய வேண்டும்; அப்படி அணிந்தால்தான் பலவித நன்மைகள் உண்டாகும் என்றும் கூறியுள்ளனர்.

அந்தணர்க்கு ஒப்பான வெள்ளை நிறம் உள்ள வைரத்தை அணிவோர் ஏழ் பிறப்பும் அந்தண ராகவே பிறப்பார்களாம்.

“ மறையோர் அணியின் மறையோராகிப்
பிறப்பேழும் பிறந்து வாழகுவரே ” என்றும்

மன்னர்க்கு ஒப்பாகக் கூறப்படும் சிவப்புநிற வைரத்தை அணிந்தால் அரசர்களுக்கெல்லாம் பேரரசனாக ஏழு பிறப்பும் பிறப்பான்.

“ மன்னவ ரணியின் மன்னவர் சூழ
இந் நில வேந்தவராவர் எழு பிறப்பும் ”
என்றும்

வணிகர்க்கு ஒப்பாகக் கூறப்படும் பச்சை நிற வைரத்தை அணிந்தவர் சிறந்த செல்வராக உலகினில் வாழ்வர்.

“ வணிகர் அணியின் மனிப்பொன் மலிந்து
தணி வற வடைந்து தரணியில் வாழ்வர் ”
என்றும்

சூத்திரர்க்கு ஒப்பாகக் கூறப்படும் கறுப்புநிற வைரத்தை அணிந்தால் சிறந்த மனைவி,பொன், நெல், நல்வாழ்வு முதலியன பெற்று இவ்வுலகின்கண் நீடு வாழ்வர்.

“ சூத்திரர் அணியின் தோகையர் கனக நெல்
வாய்ப்ப மன்றி மகிழந்து வாழ்கு வரே ”

என்றும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

மேலும் சிலப்பதிகாரம் அழற்பட்டு காதையில் மதுரை மாநகரில் அந்தணர், சாதிப்பூதம், அரசர் சாதிப்பூதம், வணிகர் சாதிப்பூதம், வேளாளர் சாதிப்பூதம், என்பதாக நான்கு பூதங்கள் இருந்தன வாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**அந்தணப் பூதமாவது:** பசுமையான முத்து வடம் அணிந்த நிலவு போல் விளங்கும். மிக்க ஒளியினை யுடைய நான்குமுகன் யாகத்திற்கென உரைத்த வகுப்புகளோடே முத்தீ வாழ்க்கையின் இயல் பினின்றும் பிழையாத தலைமை அமைந்த ஆதிப் பூதமாகிய அந்தணக் கடவுளும்,

“ நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ்
அவிரொளி
முத்தீ வாழக்கை முறைமையின் வழா அ
வேத முதல்வன் வேள்விக்
கருவியோடு
ஆதிப் பூதத்து அதிபதிக் கடவுளும் ”
என்றும்

**அரச பூதத்தை:** செவ்விய ஒளியினையுடைய பவளம் போலத் திகழ்கின்ற ஒளியினைப் பொருந்திய மேனியை உடையனாய், ஆழந்த கடல்சூழ்ந்த இவ்வுலகினை ஆளும் மன்னனைப் போல, முரசமும், வெண் கொற்றக் குடையும், கவரியும், கொடியும், புகழமைந்த தோட்டியும், வடித்த வேலும், வடிகயிறும் எனப்படும் இயைபினனாய் அளவிடற்

கரிய சிறப்புக்களையுடைய அரசர்களைப் போரின் கண் தோல்வியுறச் செய்து இந்நிலத்தை தனதாக்கிக் கொண்டு செங்கோலோச்சிக் கொடிய செயல்களை நீக்கி நீதியினை மேற்கொண்டு தன்பெயரை நிறுத்துதற்குரிய புகழினை மிகுந்து உலகின்கண் காக்கின்ற உரை அமைந்த சிறப்பினையுடைய நெடியோன் எனும் பாண்டியனை ஒத்த அதிக வரியினையுடைய அரச பூதமாகிய கடவுளும்

"பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்
ஆழக்கடல் ஞாலமாள் வோன் தன்னின்
முரைசோடு வெண்குடை கவரி நெடுங்கொடி
உரைசா லங்குசம் வடிவேல் வடிகயிறு
என இவைபிடித்த கையினன் ஆகி
எண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகம் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந் தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நெடும் புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பின் நெடி யோன் அன்ன
அரச பூதத்து அருந்திறற் கடவுளும் "

என்றும்

**வணிக பூதத்தை:** சிவந்த நிறமுடைய பொன்னை ஒத்த மேனியையுடையனாய் நிலை பொருந்திய சிறப்பினையும் மறம் பொந்திய வேலினையுமுடைய அரசர்க்குரிய தலைமையமைந்த முடிதவிர மற்றையன பூண்ட கலன்களையுடைய னாய், வாணிகம் செய்யும் முறையானே பெரிய உலகினை காத்துக் கலப்பையையும் துலாக் கோலையும் ஏந்திய கையினையுடையனாய் உழவுத் தொழிலானே உலகுக் குதவும் குற்றமற்ற வாழக்கைக் குரியோன் எனப்படுவோனாகிய விளங்கும் ஒளி யினையுடைய தலை மீது குழவித்திங்களையணிந்த இறைவனது திருவடி போலும் ஒளிமிளிரும் மிகப்பெரிய வணிக பூதமாகிய கடவுளும்,

"செந்நிறப் பசும்பொன் புரையும் மேனியன்
மன்னிய சிறப்பின் மறவேல் மன்னவர்
அரைசுமுடி யொழிய அமதந்த பூணினன்
வாணிக மரபின் நீள்நிலம் ஓம்பி
நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன்
உழவுத் தொழிலுதவும் பழுதில் வாழக்கைக்
கிழவன் என்போன் கிளரொளிச் சென்னியன்
இளம்பிறை சூடிய இறைவன் வடிவினோர்
விளங் கொளிப் பூத வியன்பெருங் கடவுளும்"

எனவும்

**வேளாள பூதத்தை:** கழுவப்பட்ட நீலமணி போன்ற மேனியனாய் ஒள்ளிய கருநிறஞ் சேர்ந்த உடையினனாய், உலகினை ஆளுதற்கேற்ற உழுபடை முதலியவற்றுடன் பொருந்திப் புலவர் பாடுதற் கேற்ற ஈகைத்துறை பலவற்றிலும் முடியச் சென்ற ஆரவாரம் மிக்க கூடற்கண்ணே (மதுரையின் கண்) பலியினைப் பெறும் பூத்த தலைவனென்னும் வேளாண் பூதமும்,

"மண்ணுற திருமேணி புரையும் மேனியன்
ஒண்ணிறக் காழகஞ் சேர்ந்த உடையினன்
ஆடற் கமைந்த அவற்றொடு பொருந்திப்
பாடற் கமைந்த பலதுறை போகிப்
கலிகெழு கூடற் பலிபெறு பூதத்
தலை னென்போன் தானுந் தோன்றி"

என்றும் கூறியுள்ளார்.

**சீவக சிந்தாமணியின் நான்கு வருணப் பாம்புகள்:**

கி.பி 9ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட சிந்தாமணியில் பாம்புகளில் கூட நால்வகை வருணங்கள் உண்டென்று கூறப்பட்டுள்ளது. இந்நூலில் சூத்திரர் என்ற சொல்லே வெளிப் படையாக எடுத்தாளப்பட்டிருக்கின்றது.

"அந்தணண் நாறும் ஆண்பா
லவியினை அலர்ந்த காலை
நந்தியா வட்டம் நாறும்
நகைமுடி அரசனாயின்
தந்துயா முரைப்பிற் றாழைத்
தடமலர் வணிகன் நாறும்
பந்தியாப் பழுப்பு நாறின்
சூத்திரன் பால தென்றான் "

(பதுமையார் அலம்பகம் 1294-ம் செய்யுள்)

**இதன் பொருள்:** பாம்பு கடித்த இடத்தில் பசுவின் பாலின் ஆவியின் வாடை நாறினால் அது பார்ப்பனச்சாதிப் பாம்பாகும். நந்தியா வட்டச் செடி மலர்ந்த காலத்தில் நாறும் மணத்தினை வீசுமாயின் அது அரசசாதிப் பாம்பாகும். தாழைமலர் மணம் நாறுமாயின் அது வணிக சாதிப் பாம்பாகும். மற்றொன்றும் கூறாத அரிதாரம் நாறுமானால் அது சூத்திரச் சாதிப் பாம்பாகும் என்று கூறியுள்ளது.

**வச்சணந்தி மாலை (வெண்பா பாட்டியல்) கூறும் வர்ணாசிரமம்**

உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டும், வல் லெழுத்துக்கள் ஆறும் பார்ப்பன வருணம் என்றும்; **த, ந, ய, ர, ப, ம** இவ்வாறு மெய்யும் அரச வருணம் என்றும்; **ல, வ, ற, ன** இந்நான்கும் வணிக வருணம் என்றும்; தமிழுக்கே சிறப்பெழுத்துக்கள் எனப் பெருமையாகக் கூறப்படும் **ழ, ள** இவ்விரண்டும் சூத்திர வருணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

நான் முன்பு திருவிளையாடற் புராணத்தில் பார்ப்பான் நிறம் வெண்மை, அரசன் - செம்மை, வணிகன் - பச்சை, சூத்திரன் -கறுப்பு என்று கூறியிருப் பதாகக் கூறினோம். அதுபோலவே இந்நூலிலும் பாக்களுக்கு கூட நிறம் கூறப்பட்டுள்ளது.

வெண்பா - வெண்மை, ஆசிரியப்பா - செம்மை, கலிப்பா- பொன்மை, வஞ்சிப்பா - கருமை

என்று கூறுகின்றது. மேலும் வெண்பா - பிராமண குலமென்றும், ஆசிரியப்பா - சத்திரிய குலமென்றும், கலிப்பா - வைசிய குலமென்றும், வஞ்சிப்பா - சூத்திர குலமென்றும் குலப் பொருத் தங்கள் கூறுகின்றது. அத்துடன் விட்டதா? இல்லை. வெண்பாவால் அந்தணனைப் பாடவேண்டுமாம். ஆசிரியப் பாவால் அரசனைப் பாடவேண்டுமாம். கலிப்பாவால் வைசியனைப் பாடவேண்டுமாம். வஞ்சிப்பாவால் சூத்திரனைப் பாடவேண்டுமாம்.

**கலம்பகம் பாடவும் நிபந்தனை:**

ஒருவன் கலம்பகம் என்ற நூல் செய்ய விரும்பி னால் தேவருக்கு நூறு பாட்டும், அந்தணர்க்குத்

தொண்ணூற்றைந்து பாட்டும், அரசர்களுக்குத் தொண்ணூறு பாட்டும், அமைச்சருக்கு எழுபது பாட்டும், வணிகருக்கு ஐம்பதும், சூத்திரனுக்கு முப்பதுமாக பாட வேண்டுமாம். என்னே இக்கால வர்ணாசிரமத்தின் கொடுமை!

### சங்க இலக்கியங்களில் பார்ப்பனரும், வேத வேள்விகளும்

சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் பார்ப் பனர்களைப் பற்றிய செய்திகள் வந்துள்ளனவற்றைக் காண்போம்.

சங்ககாலம் எனப்படுவது இன்றைக்கு சற்றேறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால மாகும். இந்தக் காலப்பகுதிகளில் எழுந்த இலக்கியங் களில் எல்லாம் ஆரியர்களின் வடமொழி வேத வேள்விகள், வைதீகநெறிகள், பண்பாடுகள் இன்ன பிறவும் காணப்படுகின்றன.

### வேத வேள்விகள்

வடநூல்களில் கூறப்பட்ட வேதமுறைப் படியே தமிழக மன்னர்கள் வேள்விகள் இயற்றியிருக் கின்றனர். ஒரு பாண்டிய மன்னன் வடநூல் முறைப் படிப் பல யாகங்கள் இயற்றியமையின் காரணமாக பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனப் பெயர் பெற்றான். மற்றும் ஒரு சோழமன்னன் இராஜசூய யாகம் செய்து அதன் காரணமாக இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று பெயர் பெற்றுள்ளான்.

பண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியானவன் வேதநெறிப்படி யாகங்கள் பல நடத்தியவன். பொரி, சமித்து முதலியவற்றில் நெய்யைச் சொரிந்து வேள்விகள் இயற்றிய யூபஸ்தம்பம் (யாக ஸ்தம்பம்) பல நட்டுள்ளான். இவனை நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய 15-ஆம் புறநானூற்றுப் பாடலில் இச்செயதி தெளிவாக குறிக்கப்படுகின்றது.

“நற்பனுவ னால் வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப்பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்விமுற்றி
யூபம் நட்டவியன்களம் பலகொல்”

இந்த யூபஸ்தம்பம் நடும் வழக்கம் தொல் காப்பியர் காலத்திலேயே தமிழகத்தில் புகுந்து விட்டது. தொல்காப்பியர் சூத்திரத்திலேயே “ யூபம் நட்டவியன் வேள்வி” என்று வருகின்றது.

யாக சாலையின் அமைப்பானது வட்ட வடிவு உடையதாகவும் பல மதில்களை உடையதாகவும் இருத்தல் வேண்டும். அதன் நடுவில் பருந்து விழுங்குவது போன்று செய்யப்பட்ட இடத்தில் யூப ஸ்தம்பம் நட வேண்டும்.

இப்படிப் பருந்து வடிவமாகச் செய்யப் படுவதற்குக் கருட சயனம் என்று கூறுவர் வட நூலார். கரிகாற்பெருவளத்தான் இறந்துபடவே கையறு நிலையால் கருங்குழல் ஆதனார் என்னும் புலவர் பாடிய 224-ம் புறப்பாட்டில் இச்செய்தி காணப்படுகிறது.

“பருதி யுருவில் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேதவேள்வித் தொழில் முடித்ததூஉம்”

பா: 224: 7 - 9.

இப்படி யூபஸ்தம்பம் நட்டு வேள்வி செய்யும் செய்தி சோழன் நலங்கிள்ளியைப் போற்றி கோவூர்க்கிழார் பாடிய 400-ஆம் புறப்பாட்டில் வந்துள்ளது.

“வேள்வி தலிந்த வேள்வித் தூணத்
திருங்கழி யிழிதரும் ஆர்கலி வங்கம்”

பா: 400: 19, 20.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் “பாப்பான் கவுணியன் விண்ணந்தாயன் ஆறங்கள் களாலும் உணரப்பட்ட வேதத்துக்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோர்களாகிய புறச்சமயத் தார் (புத்தர், சமணர்) களின் மிகுதியை வீழ்த்த வேண்டியும், அவர்களது கருத்துக்களை மக்கள் ஏற்காமல் இருக்கவும் செய்ய இருபத்தொரு வேள்வித்துறைகளையும் குறைவின்றிச் செய்து முடித்தவர்களின் மரபில் வந்தவன் என்று கூறப்படுகின்றான்.

“ஆறுணர்ந்த ஒருமுது நூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீ இ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக”

புறம் 166, 4. 9

இதில் கூறப்படும் ஆறங்கங்கள் வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிட்சை, கற்பக மென்னும் வடமொழி ஆறங்கங்களேயாகும். 21 வேள்விகள் என்ன என்றால், இந்த யாக நூல்கள் உணர்த்தும் சோம யக்ஞம் ஏழு, ஹவிர் யக்ஞம் ஏழு, பாக யக்ஞம் ஏழு ஆக இருபத்து ஒன்றாகும். (யக்ஞம் என்றால் யாகம் ஆகும்)

“புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞான் மிசைப் பொலிய
மருங்கடித்த அருங்கற்பின்
அறம் புகழ்நத வலை சூடிச்
சிறு நுதற்பே ரகலல் குற்
சில சொல்லிற் பல கூந்தனின்
நிலைக் கொத்தநின் றுணைத் துணைவியர்
தமக்கமைந்த தொழில் ”

புறம் 166, 11, 18

மற்றும் பார்ப்பனர்கள் வடநூல்கள் கூறும் ஆகவனியம், காருகபத்தியம், தென்றிசையங்கி என்னும் முத்தீக்களை வளர்த்த வேள்விகள். அந்திக் காலங்களில் செய்யப்படும் கடன்கள் செய்தல் ஆகிய செய்திகள் சங்க நூல்களில் பல இடங்களில் காணக்கிடக்கின்றன.

அந்தி அந்தணரருங்கடனிறுக்கும் முத்தீ
- புறம் 2; 22 - 23
ஒன்று புரிந் தடங்கிய இருபிறப்பாளர்

முத்தீப் புரைய - புறம் 367:12-13
மூன்று வகைக் குறித்த முத்தீச்செல்வத்திரு பிறப்பாளர் - திருமுருகாற்றுப்படை 181-182

அறம்புரி அருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை அந்தணர்
- அய்ங்குநூறு 387

கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவயின் உயிர்க்கும் என்நெஞ்செ
- கலி 36
அந்தி அந்தணர் எதிர்கொள் - கலி 119
ஒதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல - கலி 69
விரிநூல் அந்தணன் விழவு தொடங்கிய
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
- பரிபாடல் 11
இருபிறப்பு, இருபெயர் ஈரநெஞ்சத்து
ஒருபெயர் அந்தணர் - பரி :14
ஒருமுகம் மந்திரவிதியின் மரபுளிவழா
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே
- திருமுறுகாற்றுப்படை 94 -96

## பார்ப்பனர்களுக்கு பொன் பொருள் தாரை வார்த்து அளித்தல்

தாரைவார்த்தல், தாராமுகூர்த்தம் என்பன வல்லாம் வடநூல் முறைமைகளேயாகும். ஆனால் பண்டைக் காலத்து மன்னர்கள் பார்ப்பனர்களுக்குப் பொன்னும் பொருளும் வடநூல் முறைமைப்படித் தாரை வார்த்து அளித்திருக்கின்றனர்.

“ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து”
புறம் 367 : 4-5

“கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு
அருங்கலம் நீரொடு சிதறி”
புறம் 361 : 4-5

எனக் கூறப்பட்டுள்ளன. மற்றும் அரசன் பார்ப்பனனுக்கு நிலமும் பசுவும் அளித்தல் பதிற்றுப் பத்து (பா 6: 45) போன்ற நூல்களிலும் காணப்படு கின்றது.

இப்படிப் பார்ப்பனர்கள் மன்னர்களைத் தம் வயப்படுத்திக் கொண்டு அவர்கள் மனங்குளிரும் படிப் புகழ்ந்து பொன்னும் பொருளும் பெற்றதோடு மேல்நிலையும் அடைந்து வாழ்ந்திருக்கின்றனர்.

மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு வருத்தம் தரும் படியான செயலைச் செய்ய அஞ்சியிருக் கின்றனர்.

‘ஆர்புனை தெரியல் நின்முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்’
புறம் 43: 13-14

‘ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்
மாண் இழை மகளிர் கருத் சிதைத்தோருக்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள’
புறம் கா 34

இப்புறப்பாடலில் ஆண்முலை அறுத்தல், மகளிர் கருச்சிதைத்தல் போன்றே பாப்பனர்க்குத் துன்பம் விளைவிப்பதும் கொடிய குற்றம் என்ற எண்ணத்தை சங்க காலத்தில் வேரூன்றச் செய்து விட்டனர்.

மன்னன் வேற்று நாட்டுமீது படை எடுத்துச் செல்லுங்கால் முதலாவதாக பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளிகள், பிள்ளை இல்லாதவர்கள் ஆகியவர்களை போருக்கு முன் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் சென்றுவிடும்படி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும் இவர்களுக்குத் தீங்கு இழைத்தல் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளன. இங்கும் பார்ப்பனர்களுக்கு நோவன செய்யலாகாது என்ற கருத்தை அரணாக அமைத்துக் கொண்டனர்.

ஆவும் ஆன் இயல் பார்ப்பன
மாக்களும்
பெண்டிரும் பிணி
யுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு
அரும் கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப
பெறா அதீரும்
எம் அம்பு களவிடுதும் நும்
அரண்சேர்மின்
புறம்: பா.9

இப்பாடல் வடநூல்படி யாகம் பல செய்தவ னாகிய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டியமையார் என்னும் புலவர் பாடியதாகும்.

பண்டைக்காலத்திலேயே பாப்பனர்கள் மக்களோடு கலந்து பழகாமல் தனித்து இருந்து ஆச்சார அனுஷ்டானங்களைக் கையாண்டு ஒழுகி வந்திருக்கின்றனர். இச்செய்தி பரிபாடல் பாட்டு ஒன்றால் உணரக் கிடக்கின்றது.

வைகையாற்றில் தண்ணீருடன் ஈக்கள் மொய்க்கும்படியான மது கலந்து வருகின்றது என்றும் ஆற்றில் ஆடவர்களும் பெண்டிர்களும் நீராடுங்கால் அவர்கள் மீது பூசியுள்ள மணப் பொடிகள் எல்லாம் ஆற்றில் அடித்து வரப் படுகின்றன என்றும் எண்ணி, பார்ப்பனர்கள் வைகையாற்றில் குளிப்பதை யொழித்தனர். மேலும் வைகையாற்றுத் தண்ணீரில் தேன் கலந்து வருவ தாகவும் அது வழுவழுப்புற்றது என்றும் எண்ணிப் பார்ப்பனர்கள் அதில் வாய்கூடக் கழுவுவதில்லை யாம்.

“ ஈப்பாயக் அடுநறாக் கொண்டது இவ்யாறு எனப்
பார்ப்பார் ஒழிந்தார் படிவு
மைந்தர் மகளிர் மணவிரை தூவிற்று என்று
அந்தணர் தோயலர் ஆறு
வையை தேம்வேவ வழுப்புற்றென
அய்யர் வாய்பூசுறார் ஆறு.
பரிபாடல் திரட்டு 2 : 58,63

இச்செய்திகள் ஒருக்கால் கற்பனையாகவும் இருக்கக்கூடும் என்றாலும் அந்தக்காலத்தில் பார்ப் பனர்கள் வைதீக ஆசாரம் உடைய மனப்பான்மை

யினராக வாழ்ந்திருந்தனர் என்பதை இவ்வடிகள் காட்டுகின்றன அல்லவா?

பார்ப்பனர்கள் தங்கள் சாதி உயர்வைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்றே அணிந்து கொள்ளும் சாதிக்குறியாகிய பூணூலைச் சங்க காலத்தில் கூட அணிந்துகொண்டு பெருமை பாராட்டி இருந்திருக்கின்றனர். பார்ப்பனர்கள் உப நயனத்துக்கு முன் அதாவது பூணூல் தரித்துக் கொள்வதற்கு முன் ஒரு பிறப்பும் உபநயனத்திற்குப் பிறகு ஒரு பிறப்புமாக இருபிறப்பினை உடையவர்கள் என்று வடநூல்கள் கூறகின்றன.

இதன் காரணமாகவே பார்ப்பனர்கள் தங்களை இருபிறப்பாளர்கள் என்று இன்றும் பெருமையாகக் கூறிக்கொள்வதைக் காண்கிறோம். உபநயனுத்துக்கு முன் பார்ப்பான் பார்ப்பனத் தன்மை உடையவன் ஆகமாட்டான் என்றும், உபநயனத்துக்குப் பின்பே அவன் பார்ப்பனத்தன்மை அடைகிறான் என்றும் இப்படி உபநயனக் காலத்திற்குப் பின்புதான் அவன் வேதமந்திரங்கள் ஜபிக்கவும் ஆச்சார அனுஷ்டானங்களுக்கு உரியவனாகவும் ஆகின்றான் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. இந்தக் கொள்கைள் சங்க காலத்திலேயே நன்கு வேரூன்றிவிட்டன என்று சொல்லாம்.

"ஒன்று புரிந்தடங்கிய இருபிறப்பாளர்"

புறம் 367 : 12

இருபிறப்பு, இருபெயர் ஈரநெஞ்சத்து
ஒரு பெயர் அந்தணர்

பரிபாடல் 14

இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல

திருமுருகு 182

என்று பார்ப்பனர்களின் இருபிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

மற்றும் பார்ப்பனர்கள் சாதிக் குறியாகிய பூணூலைத் தோளில் அணிந்திருந்தார்கள் என்றும் அந்தப் பூணூல் ஒன்பது நூல்களால் மூன்று புரிகளாக ஆக்கப்பட்டது என்றும் கூறப் பட்டுள்ளன.

'ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்'

திருமுருகு : 183

'புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப'

பரிபாடல் 11

இதுவரை மேலே எடுத்துக் காட்டிய செய்திகளால் சங்க காலத்திலேயே தமிழர்களுக்குப் புறம்பான பார்ப்பனரும் அவர்தம் வேத வேள்விகளும் மற்ற பண்பாடுகளும் புகுந்துவிட்டன என்பதை ஓரளவுக்குக் கண்டோம். அடுத்த கட்டுரையில் சங்க இலக்கியங்களில் புராணக்கதைகள் என்ற தலைப்பில் ஓர் பகுதி காண்போம். இந்தக் கட்டுரைகளின் கருத்தே பார்ப்பனர் வேறு, நாம் வேறு, நம் பண்பாடு வேறு என்பவற்றை தெளிவுபடுத்தவது என்பதே ஆகும்.

'உண்மை' 14.02.1970, 14.03.1970, - தொடரும்


# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு:**
எரிதழல்
பெரியார்செல்வி
அ.ப.சிவா
பூங்கொடி
இளையகுமார்
விமல்ராஜ்
செந்தில்குமார்

**ஆலோசனைக்குழு:**
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
மே.கா.கிட்டு
செல்லையா முத்துச்சாமி

**பொறுப்பாசிரியர்:**
சி.இராகவன் 97868 89325

**உரிமை -ஆசிரியர் - வெளியீடு:**
சி.விஜயராகவன்

**ஆண்டுச்சந்தா தொடர்பு:**
கிருஸ்ணவேணி 77084 58086

**நன்கொடை, ஆன்லைன் சந்தா:**
குமரேசன் 99943 65133

**சட்ட ஆலோசனை:**
வழக்கறிஞர் அ.கிருஸ்ணக்குமார்

**வடிவமைப்பு:**
முகிழ் மீடியா 97873 20044

**அச்சு:**
செந்தூர் ப்ரிண்டர்ஸ், கோவை

தொடர்புக்கு:
kaattaaru2014@gmail.com



# பார்ப்பன- ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கத்தில் சென்னை உயர்நீதிமன்றம்

மௌ.அர.ஜவஹர்

சென்னை உயர்நீதிமன்றத்தில் 75 நீதிபதிகள் பதவி இடங்கள் உள்ளன. அவை இன்னும் முழுமையாக நிரப்பப்படவில்லை. தற்போது 6 நீதிபதிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். ஆனால், இதுவும் சேர்த்து 54 நீதிபதிப் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. உள்ளனர். 21 இடங்கள் காலியாக உள்ளன.

தற்போதைய நியமனத்தில் G.R.சுவாமிநாதன் என்ற மதுரையைச் சேர்ந்த R.S.S பார்ப்பனர் நியமிக்கப்பட்டு உள்ளார். இவரையும் சேர்த்து தலைமை நீதிபதி உட்பட சென்னை உயர் நீதிமன்றத்தில் மொத்தம் 11 நீதிபதிகள் பார்ப்பனர்கள். இது மொத்த நீதிபதிகள் பணியிடங்களில் 20% க்கு மேல் ஆகும். மக்கள் தொகையில் சுமார் 1% மட்டுமே உள்ள பார்ப்பனர்கள் 20% க்கு மேல் பதவிகளில் இருப்பது என்ன சமூக நீதி?

கொள்கைக்கட்சிகள் என்று கருதிக் கொள்ளும் தி.மு.க, மார்க்ஸிஸ்ட் உட்பட எந்த அரசியல் கட்சிகளும் இந்த சமூகஅநீதிக்கு எதிரான நிகழ்வுக்கு எதிராகப் போராட வில்லை. குரல் கொடுக்கவில்லை. அப்படிக் குரல் கொடுத்தாலும் அடையாளப் போராட்டங்களால் எதுவும் மாறி விடப்போவதில்லை.

**பார்ப்பன நீதிபதிகள்**

1. இந்திரா பானர்ஜி, 2. டி.என்.பிரகாஷ், 3.வைத்தியநாதன், 4. கே.கே.சசிதரன், 5. நூட்டி ராம் பிரசாத் ராவ், 6.ராஜீவ்சக்தர், 7. அனிதா சுமந்த் ( இவர் தொலைக்காட்சிகளில் விவாதங்களில் வரும் சுமந்த் சி.ராமன் அவர்களின் துணைவியார்), 8. ஆர்.சுப்பிரமணியன், 9. சி.வி.கார்த்திகேயன், 10. என்.சேசஷாயி, 11.G.R.சுவாமிநாதன்

இப்படிப் பார்ப்பனர்களை அவர்களது மக்கள் தொகை அளவுக்கும் அதிகமாக நீதிபதிகளாக வர விடுகிறோம். பிறகு, நீட் தேர்வில் உச்சநீதி மன்றம் உத்தர விடுகிறது, மாட்டிறைச்சிக்கு எதிராக உத்தர விடுகிறது எனப் பல்வேறு சிக்கல்களுக்காக போராடிக்கொண்டே இருக்கிறோம். அரசியலில் மட்டும் பார்ப்பனர்களுக்கு எதிரான மாற்றம் கொண்டு வர எண்ணுவது பார்ப்பனர்களை எந்த வகையிலும் பாதிக்காது. அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், நீதிமன்றம், சட்டமன்றம், ஊடகங்கள், கலை, இலக்கியம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர்களுக்கு மாற்று உருவாக வேண்டும். அந்த நிலைதான் சமுதாய விடுதலை.

அரசியலில் மட்டும் மாற்றம் ஏற்பட்டால் அனைத்தும் மாறிவிடும் என்ற மனநிலையை தமிழ்நாட்டு அரசியலில் ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா அவர்களே!

1. பெரியார் அவர்களின் மக்களின் கொள்கைகளை அரசியலுக்குச் சென்று அமல்படுத்தப் போகிறேன் என்று பெரியாரின் கொள்கைக்கு முரணாக அதாவது சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வராமலேயே அரசியலில் சாதிக்கப்போய் தோற்றுப் போனார்.

2. பார்ப்பனப் பண்பாட்டுக்கு ஆட்பட்டுள்ள சமூகம், சாதிய அடிப்படயிலான சமூகம், ஆணாதிக்கச் சமூகம் என்கிற அடிப்படையிலான சமூகத்திடம் எந்தப் பண்பு மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் ஒட்டுக்குப் போய் நின்று, படிப்படியாக கொள்கைச் சமரசமாகிப்போய், இச்சமூகத்தில் உள்ள அத்தனை அழுக்குகளையும் உள்ளடங்கிய அரசியல் கட்சியாகிப்போனதுதான் மிச்சம்.

3. கொள்கைபோய் பணம் சேர்ப்பதுதான் கொள்கை எனமாறி தேசியக் கட்சிகளிடமிருந்து ஊழலையும் ஒழுங்கீனத்தையும் பெற்று, வழக்குகளுக்குப் பயந்து மாநில உரிமைகளை அடகு வைத்ததுதான் மிச்சம்.

"அரசியலும்,பொருளாதாரமும் சமூகம் பெற்ற பிள்ளைகளே தவிர வேறில்லை. சமூகத்தில் வேலை செய்யாமல் அரசியலிலும் பொருளா தாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது"

-தோழர் பெரியார்

எனவே நம் உழைப்பு சமூக மாற்றத்துக்கே இருக்க வேண்டும். சமுதாய இயக்கங்கள் தான் அரசியல் அமைப்புகளை இயக்க வேண்டும். சமுதாயம் மாறினால், அதன் எதிரொலியாக, சட்டம், நீதி, நிர்வாகம், ஊடகம், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துத் தளங்களிலும் தானாக மாற்றம் உருவாகும்.

# நூல் அறிமுகம்

சி.இராவணன்

# பொன்னர் சங்கர் கதை

தமிழ்நாட்டில் கொங்கு மண்டலம் என அழைக்கப்படும் கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் பகுதியைச் சார்ந்த வேட்டுவக்கவுண்டர் சமூக மக்களைத் தவிர, அனைவரும் வணங்கும் தெய்வமாக அண்ணன்மார்சாமி உள்ளது. இதில் அதிகமாக அண்ணன்மார்சாமியை வணங்குபவர்கள் கொங்குவேளாளக் கவுண்டர்கள் மற்றும் சக்கிலியர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஆகும். அண்ணன்மார் சாமியின் கதையை முதலில் **கள்ளழகர் அம்மானை** என்பவரும் அவரைத்தழுவி **பிச்சன்** என்பவரும் எழுதிய கதைப் பாடலுக்கு ஒரு விரிவான ஆய்வு நூலை '**பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு**' என்ற தலைப்பில், **வரலாற்று ஆய்வாளர் பரணன்** அவர்கள் எழுதிய நூலை காட்டாறு வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறோம்.

500 பக்கங்களில் பெரும் ஆய்வு நூலாக வந்துள்ளது. 50 பக்கங்களில் வண்ணப் படங்களாகவும், 70 பக்கங்களில் கருப்பு வெள்ளைப் படங்களாகவும், மீதம் உள்ள பக்கங்களில் யாரும் மறுக்க முடியாத அளவுக்கு வரலாற்று ஆதாரங்களுடனும், நீதிமன்ற ஆவணங்களுடன் எழுதப் பட்டுள்ளது. முதல் பாகத்தில் 44 தலைப்புகளுடனும், இரண்டாம் பாகத்தில் நான்கு தலைப்புகளுடனும் உள்ளது.

கொங்கு மண்டலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பெரும்பான்மை மக்களாகிய கொங்கு வேளாளக் கவுண்டர்கள் அண்ணன்மார்சாமியை வணங்குகின்றனர். அதே போல் மற்ற சமூகமாகிய சாணார், வண்ணார், நாவிதர், சக்கிலியர் சமூக மக்களும் வணங்குகின்றனர். இதில் உள்ள வேறுபாடு என்னவென்றால் கொங்கு வேளாளர்கள் பன்றி பலியிடுவதில்லை. மற்ற சமூக மக்கள் வணங்கும் இடங்களில் பன்றி பலியிடும் நிகழ்வு உள்ளது. இந்த விழாக்களுக்கு அடிப்படையாக இருப்பது அண்ணன்மார்சாமி கதைகள்தான். உடுக்கையடிப் பாடல்களாக அண்ணன்மார் கதைகள் 18 நாள் முதல் 30 நாள்வரை நடக்கும். உடுக்கையடிப்பாடல்களின் தொகுப்பே அண்ணன்மார் சாமிக் கதைகள்.

உடுக்கையடிப் பாடல்கள் அனைத்தும் கற்பனையானவை. இட்டுக்கட்டியும், முன்னோர்கள் சொன்னதைச் செவிவழிச் செய்தியாகக் கேள்விப் பட்டதையும் வைத்துப் பாடப்பட்ட பாடல்கள் ஆகும். பிச்சன் என்பவர் தொகுத்த அண்ணன்மார் சாமிக் கதையை, சென்னைப் பல்கலைக்கழகம் ஆய்வு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் சேர்த்துள்ளது.

கற்பனையும், மூடநம்பிக்கையும், ஜாதிவேறுபாடும் நிறைந்த ஒரு நூலை எப்படிப் பாடத் திட்டத்தில் சேர்க்கலாம் என்பது வரலாற்று ஆசிரியர் பரணன் அவர்களின் கோபம் ஆகும். அந்த கோபத்தின் வெளிப்பாடும், இயல்பாகப் பெரியார் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு என்றும் இருக்கும் சமூகப் பொறுப்பும்தான் அவரை ஒருமிகப் பெரிய ஆய்வுநூலை எழுதத் தூண்டியுள்ளது.




இந்த நூலின் 17ம் பக்கத்தில் 'வளநாடு - 1' என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில், "உடுக்கையடிப் பூசாரிகள் பலரையும் வேடிக்கையாக இதுபற்றி கேட்ட போது, 5000 ஆண்டுகள் இருக்கும் என்றனர். தெருக்கூத்துக் கலைஞர்கள் 2000 ஆண்டுகள் என்றனர். உடுக்கைப் பூசாரிகளும் இதையே சொன்னார்கள். இவர்களின் பொய்யையே மாயனூர்க் கோவிலில் எழுதியும் வைத்து விட்டனர்."

மேற்கண்ட செய்தி பிழையானது என நிருபிக்க நூலாசிரியர் பல்வேறு கல்வெட்டுக்களிலும் சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய 'பிற்காலச் சோழர் சரித்திரம்' என்ற நூலையும் ஆதாரமாகக் காட்டி பொன்னர் - சங்கர் கதை நடந்த காலம் கி.பி 1450 - 70 வரை தான் என்று ஆதாரத்துடன் நிறுவி உள்ளார்.

மேலும், பொன்னர் - சங்கர் மற்றும் அவருடைய முன்னோர்களும் நாடுகாவல்

அதிகாரியாக இருந்தவர்களே தவிர, மன்னர்கள் அல்ல எனவும் நிருபித்துள்ளார். பொதுவாக புராண இதிகாசங்கள் தொடங்கி இன்றைய கவிஞர்கள் வரை கற்பனை கலந்து எழுதுவதுதான் இலக்கியம் எனக் கூறித் தாங்கள் எழுதும் பொய் களுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். புராணங்களில் காலங்களைக் கணக்கிட ஒரு யுகம், இரண்டு யுகம் என சொல்லுவது போல் உடுக்கையடிப் பாடல் பாடுபவர்களும் தங்கள் எண்ணம் போல் அளந்து விட்டுள்ளனர் என்பதே உண்மை.

இரத்தக்கட்டிகள் என்னும் தலைப்பில் 211 ம் பக்கம் உள்ள கட்டுரையில் "வளநாட்டின் அழிந்த இடங்களில் கருத்த கற்கள் அரை கிலோ, கால் கிலோ எடைகளில் சிதறிக்கிடக்கின்றன. கரும்பழுப்பு நிறத்தில் பொடிக்கற்கள் வரை பரவி உள்ளன. படுகளத்திலும் பாறைகளுக்கு அருகே மேற்குப் பகுதிகளில் கரும்பழுப்புக்கற்கள் பல்வேறு அமைப்புகளில் குவியலாகவும் தனித்தனியாகவும் சிதறிக் கிடக்கின்றன. இதைப் போரிட்டவர்களின் இரத்தக் கட்டிகள் என்று எல்லாரும் எடுத்துப் பார்த்துவிட்டு போட்டுவிட்டுச் செல்கின்றனர்."

பதினான்காம் நூற்றாண்டில் நடைபெற்ற சண்டையில் சிந்திய இரத்தம் இன்னமும் கற்கட்டி களாக உள்ளது என்றும், அதை எடுத்துப் பயன் படுத்தக் கூடாது என்பதும், எவ்வளவு பெரிய மூட நம்பிக்கை. இது மட்டுமல்லாமல் வீரப்பூர் பகுதி யில் உள்ள வேட்டுவக்கவுண்டர் மக்களிடையே உள்ள ஒரு மூடநம்பிக்கை என்ன வென்றால், வீரப்பூர் திருவிழாவில் அம்புவிடும் நிகழ்வில் அம்பு எந்த திசையில் செல்கிறதோ, அந்தத் திசையில் உள்ள வேட்டுவக்கவுண்டர் சமூகத்தில் ஒரு இறப்பு நடக்கும் எனவும் சொல்வார்கள். பக்தி வந்தால் புத்தி போகும் என்று தோழர் பெரியார் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாக உள்ளது.

பி.சி.ஆர் (பறப்பயல்) என்னும் தலைப்பில் 230 வது பக்கம் உள்ள கட்டுரையில் பறையர் சமூக மக்கள் ஜாதி ரீதியாக இழிவு செய்யப்படுவதை நூலாசிரியர் ஆதாரத்துடன் விளக்குகிறார். கள்ளழகர் அம்மானையின் பாடல்களில்,

பார்க்கும் அந்த வேளையிலே
பறப்பயலும் ஓடிவந்தான் (பக்16)
நித்திரை வெறியோடா
நினைவு கெட்ட பறப்பயலே (பக் 51)
அண்ணன்மார் சாமி கதையில் (பிச்சன்)
அடிமைப் பறையனும் ஐயாவே
என்று சொன்னேன் (பக்286)

என்று பாடல் வரிகள் உள்ளது. அப்பட்டமாக ஜாதி வெறியைத் தூண்டும் பாடல்கள் இடம் பெற்று உள்ளது. இது மட்டுமல்லாமல் வேட்டுவர்களையும், பள்ளர்களையும் இழிவுபடுத்தும் பாடல்களும் உள்ளன. இந்த அண்ணன்மார் கதைப்பாடல்கள் 1948 க்கு முன்பு வெள்ளையர் ஆட்சியில் சேலம் மாவட்ட ஆட்சியரால் தடை செய்யப்பட்டது. ஏனெனில் இந்தக் கதையை ஒட்டி இரு சமூகங் களுக்குள் இடையே நடந்த மோதலில் 40 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அதனால் வெள்ளையர்கள் இந்த நூலைத் தடை செய்தனர். ஆனால் நம்மவர்கள் வாக்கு வங்கி அரசியலுக்காக இதைப் பல்கலைக்கழகத்தில் பாடமாகவே வைத்துவிட்டனர். இதை எப்படி பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கலாம்? சட்டப்படி இந்தப் பாடலை பாடமாக வைக்க அனுமதி கொடுத்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் மீதும் துறைத்தலைவர் மீதும் தீண்டாமை வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.

> **"கற்பனையும், மூடநம்பிக்கையும், ஜாதிவேறு பாடும் நிறைந்த ஒரு நூலை எப்படிப் பாடத் திட்டத்தில் சேர்க்கலாம் என்பது வரலாற்று ஆசிரியர் பரணன் அவர்களின் கோபம் ஆகும்.**

நாட்டார் தெய்வங்களும், குல தெய்வங்களும் தமிழர்களின் கடவுள்கள் என்றும் அவர்களுக்கும் ஆரியக் கடவுள்களுக்கும் தொடர்பில்லை எனவும் பல முற்போக்கு அறிஞர்கள் பேசி வருகின்றனர். இந்த நூலில் அண்ணன்மார் கதை இராமா யணத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது என்பதையும் நூலாசிரியர் ஆதாரத்துடன் பதிவு செய்கிறார்.

ஆக, எந்தக் கடவுள் கதைகளாக இருந்தாலும் அது ஆரியக் கடவுளாக இருந்தாலும், நாட்டார் தெய்வங்களாக இருந்தாலும் மூடநம்பிக்கை, பொய், ஜாதிய ஏற்றத்தாழ்வு ஆகியவைதான் நிறைந்து கிடக்கிறது என்பதை **பொன்னர் – சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு** என்ற நூலின் மூலம் மறுக்க முடியாத வரலாற்றுச் சான்றுகளுடன் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தன்னை பெரியார் தொண்டராக கூறிக் கொள்ளும் டாக்டர் கலைஞர் அவர்களும் எந்த விமர்சனமும் இல்லாமல் பொன்னர் - சங்கர் கதையை எழுதியுள்ளதும் அவருடைய சமூகப் பணியில் ஒரு கரும்புள்ளியே ஆகும். தேர்தல் அரசியல் அவரை ஆட்டி வைக்கிறது.

"சாதி வித்தியாசமோ - உயர்வு, தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக்கூடாது என்று சொல்லிவிட வேண்டும். மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும், உயர்வு தாழ்வு வித்தியாசம் கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைக்கவேண்டும்." (பெரியார் சிந்தனைகள், தொகுதி 1, பக் 330 ) என்ற பெரியாரின் கருத்துக்களுக்கு ஏற்ப மக்களை மடமைக் குள்ளாக்கும் புராண இதிகாசங்களையும், கற்பனைக் கதைகளையும் பாடத்திட்டத்தில் இருந்து நீக்கி அறிவுள்ள சமூகம் உருவாக அனைத்து முற்போக் காளர்களும் முன்வர வேண்டும்.

**நூல் கிடைக்கும் இடம்:** சமூக வரலாற்றுச் சங்கம், பெரியாரியல் கலை இலக்கிய ஆய்வு மன்றம், 9/349 யாசிக்கா இல்லம், சி.ஆ.கோயில் சாலை, கரூர் 639001, தொடர்புக்கு- 9443673252







# மாட்டிறைச்சித் தடையும் மருந்துகளின் விலை உயர்வும்!

ஜெலட்டின் கேப்ஸ்யூல்கள்,வைட்டமின் சத்து மாத்திரைகள்,மருந்துப் பொருள்கள் மாட்டின் எலும்புகள்,தோல்,கால்நடைகளின் திசுக்கள் ஆகியவைகளிலிருந்து தயாரிக்கப்படுவதாக மருந்து தயாரிக்கும் துறையினர் தெரிவிக்கின்றனர்.இதனால் இப்பொருள்களின் விலைகளும் உயருகின்றன.

மாட்டிறைசிக்காகத் தடை கோரி போராடு பவர்கள் இந்த உண்மை தெரியும்போது சற்று கடினமாகவே இருக்கும். ஆனால்,கால்நடைகள் கொல்லப்படுவது வெறும் இறைச்சி உண்பவர்களின் மகிழ்வுக்காக மட்டுமல்ல. மருந்து தயாரிக்கும் துறைகளிலும் பயன்படுத்துவதற்காக கால்நடைகள் கொல்லப்படுகின்றன.

மருந்துகளை ஜெலட்டின் கேப்ஸ்யூல்களில் (குப்பிகள்) அடைத்து வழங்குகிறார்கள். வைட்ட மின் சத்து மாத்திரைகள்,கோழித்தீவனம் எலும்புகள்,தோல் மற்றும் கால்நடைகளின் திசுக்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் மூத்த செயல் அலுவலராக உள்ள ஒருவர் கூறும்போது,சில வழிகளில் அல்லது மற்ற வழிகளில் நாம் எல்லோருமே நம்முடைய அன்றாட வாழ்வில் மாட்டிறைச்சியை எடுத்துக்கொள்கிறோம் என்று கூறினார்.மாநில அரசு வழக்கு போட்டுவிடும் என்கிற அச்சத்தால் தம் பெயரை வெளியிடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் பெரும்பாலான ஜெலட்டின் தயாரிக்கும் நிறுவனத்தினர் கூறும்போது,மாடின் எலும்புகளைக் கொண்டுதான் ஜெலட்டின் தயாரிக்கிறோம் என்று கூறுகின்றனர்.மகாராட்டிரம் மற்றும் அரியானா மாநிலங்களில் மாட்டிறைச்சித் தடையில் கடுமையான சட்டங்களின் மூலம் தடை போடப்பட்டுள்ளதால், வரும் நாள்களில் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாக அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர்.

ஜப்பான் நிறுவனமாகிய நீட்டாவுடன் இணைந்து ஜெலட்டின் உற்பத்தியில் கேரளாவை மய்யமாகக் கொண்டு செயல்பட்டு வரும் நீட்டா ஜெலட்டின் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சஜ்ஜிவ் மேனன் கூறும் போது, எருமைகளின் எலும்புகளையே நாங்கள் பயன் படுத்துகிறோம். எருமையின் எலும்பிலிருந்து கிடைக்கும் உறுதியான படிமங்களிலிருந்து எடுத்துக்கொள்கிறோம்.

இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், அவற்றை எடுத்துச் செல்லும்போது, நேரடியாக எந்த மாட்டின் எலும்பிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை அது எருமை மாட்டிலிருந்து எடுக்கப் பட்டதா? பசு மாட்டிலிருந்து எடுக்கப் பட்டதா? என்று யாரும் சாதாரணமாகக் கூறிவிட முடியாது. ஆனாலும்,இதில் எந்தவகை எலும்பு என்பதில் சிலர் ஏற்படுத்துகிற பிரச்சினை மருந்து உற்பத்தித் தொழிலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறினார்.

பசுக்கொலை தடுப்புச் சட்டத்தை விரிவாக்கி எருது,வண்டி மாடுகளையும் மகாராட்டிரம் மற்றும் அரியானா அண்மையில் குற்றமாக்கி சட்டங்களை நிறைவேற்றியுள்ளன.

எருதைக் கொல்வதும் தற்போது தண்டனைக் குரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மகாராட்டி ரத்தில் அய்ந்து ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் அரியானாவில் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சியில் முக்கிய பங்கு வகிப்பவை எருமைமாடுகள்தான்.இது வரையிலும் சட்டத்தின் படிதடை இல்லாமல் இருந்தது.இப்போது அதற்கும் தடை இல்லா விட்டாலும், தண்டனைக்கு பயந்து ஏராளமான உண்வு விடுதிகள்,உணவகங்களில் மாட்டிறைச்சி உணவு வழங்குவதை நிறுத்தி விட்டனர்.

21 லட்சம் கால்நடைகள் பன்னாட்டு வேளாண் முறைமை நிறுவனத்தின் தகவலின் படி, இந்தியா உலகிலேயே கால்நடைகளில் அதிக எண்ணிக்கை உள்ள நாடாக இருக்கிறது.21 இலட்சம் கால்நடை எலும்புகள் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதிக அளவிலான கால் நடைகளின் எண்ணிக்கை இருப்பதால் ஜெலட்டின் ஏற்றுமதி யாளர்கள் முன்னணியில் உள்ளனர். குஜராத்தில் இயங்கிவரும் நீட்டா தொழிற்சாலை தான் ஜெலட்டின் உற்பத்தியில் முக்கிய மய்யமாக உள்ளது.

கால்முட்டி வலிக்கு அளிக்கப்படும் புரோட்டின் துணைப்பொருள் கொலோஜென் பெப் டைட், ஜெலட்டினிலிருந்து உருவாக்கும் தொழில் தற்போது அபாயத்துக் குள்ளாகியுள்ளது.

ஜெலட்டின் உற்பத்தித் தொழிலில் ரூ.5,000 கோடி மதிப்பிலான ஜெலட்டினை வாங்குகிற இடத்தில் உள்ள முதன்மையான பெரிய நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

மருந்து நிறுவனங்களில் ஒவ்வொரு 10 மாத்திரைகள் விற்பனையாகும்போதும் ஒரு கேப்ஸ்யூல் விற்பனையாகிறது. ஆஸ்த்துமாவுக்கான மருந்துகளில்,கேப்ஸ்யூல்கள் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன.

மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் சார்பில் கூறும்போது,கேப்ஸ்யூல்கள் பயன்பாடு அலோபதி மருத்துவத்துக்கு மட்டும் என்கிற வரையறைக் குட்பட்டதல்ல.ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர் களும் கேப்ஸ்யூல் முறையைக் கையாளத் தொடங்கிவிட்டார்கள்.

மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் சார்பில் அதன் மூத்த அலுவலர் ஒருவர் கூறும்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பினராக உள்ளவர்களே எங்களைப்போன்ற மருந்து தொழில் நிறுவனங் களுக்கு கால்நடை எலும்புகளை சேகரித்துக் கொடுத்து வருகிறார்கள்.இந்தத் தடையானது அவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடும்.ஆகவே,இனி நாங்கள் கேப்ஸ்யூல்களை இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது.அதே நேரத்தில் பலபேருக்கான பணி வாய்ப்பும் இதில் தொடர்புள்ளது என்பதை உணரவேண்டும் என்றார்.

**மாட்டிறைச்சியிலிருந்து உற்பத்திப்பொருள்கள்**

மருந்துகளில் ஏராளமான அளவில் மாட்டிறைச்சியிலிருந்து பெறப்படக்கூடிய பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.இது குறித்து அரசுத்துறையில் உள்ளவர்கள் விழிப்புணர்வு ஏதும் இல்லாமல் உள்ளனர்.

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ரோட்டாவைரஸ் போன்ற தடுப்பு மருந்துகள் எதிர்ப்பு சக்திக்காக பரிந்துரைக்கப்படு கின்றன.அறுவை சிகிச்சையின் போது இரத்தம் உறைந்து போவதைத் தடுப்பதற்கான துரோம்பின் எனும் மருந்து மாட்டின் கருவிலிருந்து பெறப்படும் சீரத்திலிருந்தும் பசு மாட்டின் கருவிலிருந்தும் துணைப்பொருள்களாக பெறப்படுகின்றன.

இல்லினாய்ஸ் பகுதியில் இயங்கிவரும் பன்னாட்டு செர்ரம் தொழில் கூட்டமைப்பு விலங்குகளிலிருந்து பெறப்படும் சீரம் விற்பனையை முறைப்படுத்திவருகிறது.அந்த அமைப்பின் உறுப்பினர்கள் மருந்து நிறுவனங்களுக்கு பெற்றுத்தருவதற்கும்,விற்பனை செய்வதற்கும் பொறுப்பானவர்களாக உள்ளனர்.

மாட்டின் கருவிலிருந்து கிடைக்கும் இரத்தம் இந்தியாவிலிருந்து பெறப்படுகிறது.பன்னாட்டு செர்ரம் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து இந்தியாவிலிருந்து விநியோகஸ்தர்கள் அதற்குரிய கால்நடை மருத்துவச் சான்றுகளுடன் அளிப்பார்கள் என்பதை அக்கூட்டமைப்பின் சார்பில் உறுதி செய்துள்ளனர்.

**மறுசிந்தனை வேண்டும்**

மாட்டிறைச்சிக்குத் தடைவிதிக்கின்ற மாநில அரசுகள் வெளிநாடுகளிலிருந்து கால்நடைகளின் இறைச்சிகளை இறக்குமதி செய்வதையும் தண்டனைக்கு உரிய குற்றமாக கொண்டுவருவதில் மருத்துவத்துறைக்காக மாட்டிறைச்சி தடைகுறித்து மறுசிந்தனை செய்யவேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் மருந்து தொழிலில் கால்நடைகளில் மாற்றாக சிலவற்றைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வு நடைபெற்றுள்ளது.

அறுவை சிகிச்சைக்குப் பின் தையல் போட பயன்படும் நூலாக,மாட்டின் குடலுக்குப்பதிலாக மருந்து நிறுவனங்கள் செம்மறி ஆடுகளைப் பயன்படுத்தத் தொடங்கி உள்ளன.என்றாலும் மாட்டிறைச்சியின் துணைப்பொருளையே பரவலாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

பன்னாட்டளவில் கேப்ஸ்யூல்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இரண்டாமிடத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனமாக உள்ள ஏசிஜி நிறுவனத்தின் தலைவரான அஜீத்சிங் கூறும்போது,சில ஆண்டுகளுக்கு முன்பாக தாவரங்களிலிருந்து (கடற்பாசி அல்லது மரக்கூழ்) பெறப்படும் கேப்ஸ்யூல்களை அறிமுகப்படுத்தினோம்.மருந்து நிறுவனங்கள் அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை.இதற்கெல்லாம் பற்றாக்குறை ஏற்படும் என்று நிறுவனங்கள் கருதவில்லை.அதேபோல்,நுகர்வோரும் அதைப் பற்றிக் கவலை கொள்வதில்லை என்று கூறினார்.

நன்றி: விடுதலை - எக்னாமிக் டைம்ஸ், 24.03.2015




அரசூர் அ.ப.சிவா

# மணல் வீடு

இன்றைய தேதியில் தமிழகம் எதிர்நோக்கி யிருக்கும் முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று கட்டு மானங்களுக்கான ஆற்று மணல் பிரச்சனை. “வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப் பார்” எனப் பழமொழி நடைமுறையில் உண்டு. நவீனத் தொழில் வளர்ச்சி, வங்கிகளில் பரவலாகக் கிடைக்கும் வீட்டுக் கடன்கள் மற்றும் நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பரந்து விரிந்தி ருக்கும் மனைப்பிரிவுகள் போன்ற காரணிகளால் நடுத்தர மக்களின் கனவான வீடு என்பது சுலபமாக இருந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரை கட்டுமானங் களுக்காக ஆற்றுமணல் பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது. கேரளாவில் ஆற்றுமணல் அள்ளுவதைத் தடைசெய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் அரசின் துணையோடு அள்ளப்படுகிற ஆற்றுமணல் தமிழகத்தின் தேவையைத் தாண்டி கர்நாடகம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களுக்கும் கடத்தப்படுகிறது.

**கட்டுமானங்களில் மணலின் பங்கு**

கட்டுமானங்களில் பயன்படுத்தப்படும் மணல் என்பது தொழில் நுட்பரீதியில் பார்த்தால் FINE AGGREGATE என்றும், ஜல்லிக்கற்களை CORSE AGGREGATE என்றும் சொல்வார்கள். கடந்த தலைமுறை வரையிலும் ஓடைகளில் கிடக்கும் மணலைப் பயன்படுத்தியே நடைபெற்ற கட்டுமான வேலைகள், இப்போது தேவை அதிகரித்து உள்ளதால் ஆற்றுமணல் பயன்படுத்தி நடை பெறு கிறது..

நவீனத் தொழில் நட்பத்தில் *CORSE AGGREGATE* என்று சொல்லப்படுகிற ஜல்லிக் கற்களை பொடி செய்து *FINE AGGREGATE* ஆக மாற்றலாம். அது *M.SAND – MANUFATRUCING SAND* எனச் சொல்லப்படுகிறது.

**தமிழக கட்டுமானங்களில் மணல் விற்பனை குளறுபடிகள்**

கரூர் காவிரி ஆற்றுப் படுகைகளில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான லாரிகளில் மணல் அள்ளப்படுகிறது. அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்பட்டதால் டெல்டா மாவட்டங்களில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அப்படி அள்ளப்பட்ட மணலின் விற்பனை வருவாய் அரசுக்கு முழுதும் கிடைக்காமல் அரசியல் வாதிகளிடமே செல்கிறது.

நீண்ட நாட்களாக ஆற்றுமணல் அள்ளப்படும் பிரச்சனைகள் பேசப்பட்டாலும் அவ்வப்போது நடைபெறும் போராட்டங்களால், சிறிதளவில் தடைபட்டு மீண்டும் விற்பனை ஜோராக நடைபெற்று வரும். இதுதான் தமிழகத்தில் வழக்கம். தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நடைபெறும் போதெல்லாம் மணல் அள்ளும் குழுவும் மாற்றப்படும். அச்சமயங்களில் 10 முதல் 15 நாட்கள் வரை வெளியிடங்களில் பதுக்கி வைத்து இருக்கிற மணல் அதிக விலைக்கு விற்கப்படும். அது போலவே ஜூன் 2 ம் வாரங்களில் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடும் போதெல்லாம் இதே போல கள்ள மார்க்கெட் மணல் விற்பனை ஜோராக நடைபெறும்..

லாரிகளில் அதிக அளவு பாரம் ஏற்றிச் சொல்லும் பிரச்சனை காரணமாக 350 கன அடியிலிருந்து 250 கனஅடியாக அளவு மாற்றப் பட்டதிலிருந்து கனஅடி 30 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த மணல் 40 ரூபாய் ஆக மாறியது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அதிமுக அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து, பழைய நடைமுறை தொடர்ந்ததில் மணல் விற்பனை தடையில்லாமல் அப்படியே நடைபெற்றது.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி மற்றும் மணல் அள்ளும் பொதுப் பணித்துறை காண்டிராக்டர் சேகர் ரெட்டியின் கைதுக்கு பின் மணல் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. கோவை, திருப்பூர் மாவட்டங் களில் 250 கன அடி மணல் 10,000 ரூபாய்க்கு வழக்கமாக விற்று வந்தது. கடந்த ஜனவரி மாதம் முதல் 18,000 ரூபாய் ஆக அதிகரித்தது. தற்போது அதே 250 கன அடி மணல் ரூபாய் 40,000 வரை விற்கிறது

ஏன் இயற்கையாகக் கிடைக்கும் பொருளுக்கு இவ்வளவு தட்டுப்பாடு என்றால், பொதுப்பணித் துறை ஒப்பந்தகாரார்கள் அள்ளி விற்று வந்த மணல், தற்போது அரசால் நேரடியாக விற்கப்படுகிறது. ஒப்பந்தப் பணியாளர்கள் அதிகாலை 5 மணிக்கே அள்ளுவதைத் தொடங்கி விடுவார்கள். ஆனால் அரசு ஊழியர்கள் காலை 10 மணிக்கே மணல் அள்ளுவதைத் தொடங்குகிறார்கள். ஒப்பந்தக் காரார்களால் 15 முதல் 18 மணி நேரம் வரை பணி நடந்து, நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில் விற்று வந்த மணல் லோடுகள் அரசு ஊழியர்களால் நாள் ஒன்றுக்கு 100 க்கும் குறைவாக ஆக்கப்பட்டுள்ளது.

மாதம் 20 முதல் 25 முறை மணல் விற்று வந்த ஒருவரால் இப்போது 1 முதல் அதிகபட்சம் 5

முறையே மணல் விற்க முடிகிறது. அதனால் தான் இந்த விலையேற்றம். கட்டுமானங்கள் அதிகம் நடக்கும் மேற்கு மாவட்டங்கள் தொடங்கி, தமிழகம் முழுதும் கட்டுமான பணிகள் ஸ்தம்பித்து வீட்டது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து தவித்து வருகிறார்கள். விவசாயத்துக்கு அடுத்த படியாகக் கட்டுமானத் துறையிலேயே அதிகத் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்போது தினமும் அள்ளப்படும் மணலில் உள்ளூர் லாரிகளுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் தினமும் கரூர் சுற்றுவட்டார லாரிகளுக்கே முன்னுரிமை தருவதால் அவர்கள் தினமும் மணல் விற்று, ஆயிரக் கணக்கில் சம்பாதித்து வருகிறார்கள். என் நண்பர் ஒருவர் சொன்னார், புது வீடு 75 சதவிகிதம் முடிந்து விட்டது. செப்டம்பர் மாதம் திருமணம் 50,000 ரூபாய்க்கு மணல் விற்றாலும் வாங்கித்தானே ஆக வேண்டும். இது போன்ற சூழல்களைப் பயன்படுத்தி கொள்ளை அடித்து வருகிறார்கள் சிலர்.

நம் அண்டை மாநிலமான கேரளாவில் ஆற்று மணல் அள்ள அனுமதியில்லை. பிறகு எப்படி அங்கு கட்டுமானங்கள் நடைபெற்று வருகிறது என்று பார்ப்போமானால் எம்.சேண்ட் (M.SAND – MANUFATRUCING SAND) அதாவது செயற்கை மணல் கொண்டு அதிக அளவில் நடைபெறுகிறது. சரி நாமும் அதே போல பயன்படுத்தி கட்டிடங்களைக் கட்டலாம் என்றால் சரிதான்.

ஆனால் அதிலும் ஒரு புதிய பிரச்சனை இங்கு மணல் லோடு 10,000 ரூபாய் விற்றபோது எம்.சேண்ட் விலை 8,000 விலை வைத்தியாசம் குறைவு. அதனால் யாரும் அதிகமாக பயன்படுத்தவில்லை. ஆனால் இப்போது மணல் தட்டுப்பாட்டைக் கணக்கில் எடுத்துக் கொண்டு எம்.சேண்ட் விலை 16,000 முதல் 18,000 வரை அதிகப்படுத்தி விட்டார்கள்.

எதையும் கண்டுகொள்ளாத அரசு, வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளை அடிக்கும் வியாபாரிகள் இவர்களுக்கு மத்தில் சிக்கித் தவிக்கிறார்கள் கட்டுமானத் தினக்கூலித் தொழிலாளர்களும் நடுத்தர வர்க்க மக்களும்.

**இதற்கு என்னதான் தீர்வு**

தமிழகத்தில் உள்ள கட்டுமான துறை வல்லுநர்கள், வடிவமைப்பாளர்கள், பொறியாளர்கள், பயிற்சி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் ஆற்று மணல் வேண்டாம் என் உறுதியாகக் கூற வேண்டும்.

இங்குள்ள விவசாய சங்கங்கள், இயற்கை ஆர்வலர்கள், என அனைவரு இப்பிரச்சனையின் தன்மை புரிந்து மக்களிடம் ஆற்றுமணலைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யப் பிரச்சார இயக்கம் தொடங்க வேண்டும்.

விற்கப்படும் எம்.சேண்ட் தரம் மற்றும் விலையை அரசு முறைப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாது கட்டிடங்களுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து கனிம வளங்களின் பயன்பாடுகளை அரசு நெறிப்படுத்த வேண்டும்.

மதுவகைகளை நுகரும் மக்களிடம் அதுபற்றிய விழிப்புணர்வு, அதைத் தயாரிக்கும் நிறுவனங்களிடம் அதன் தரம் ஆகியவை பற்றிப் பேசாமல் டாஸ்மாக்கு எதிராக நடைபெறும் போராட்டங்கள் போன்றே அவ்வப்போது ஆற்றுமணலுக்கு எதிராகப் போராடுவது, மணல் குவாரிகளை மூடுவது, எந்த வகையிலும் பயன் தராது.

கனிமவளங்கள் அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்லும் சொத்து. ஆற்று மணலை அள்ளி காங்கிரீட் கூடுகளாக மாற்றி அடுத்த தலைமுறைக்கு ஆரோக்கியமற்ற சூழலைத்தந்து என்ன பயன்? அதற்காக வளர்ச்சியையும் தடுக்கமுடியாது. கனிமவள உபயோகங்களை நெறிப்படுத்த வேண்டும்.

நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன் மணல் அள்ளி வரும் லாரிகளின் உள்ளே இந்திய தேசிய கொடி கம்பீரமாக மாட்டியிருக்கும். எது தேசப்பற்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் ..

## திருப்பூரில் ‘திராவிடன்’ பிறந்தான்

திருப்பூர் பிரியா – சண்முகம் இணையரின் மகனுக்கு திராவிடன் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

## நன்கொடை

ஒட்டன்சத்திரம் தோழர் சிவா காட்டாறு இதழ் வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளார். தோழருக்கு மிக்க நன்றி.

## மணமகள் தேவை

நாமக்கல் மாவட்டம் மெட்டாலாவில் உள்ள இலயோலா கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றும் தோழர் எஸ்.சி.அனிஷ்குமார் அவர்களுக்குத் துணைவி தேவை. தோழர் அனிஷ் குமார் மானாமதுரையைச் சேர்ந்தவர். கல்லூரி, பள்ளிகளில் பணியாற்றுபவர்களோ, பணியாற்றுவதற்கு உரிய கல்வி கற்றவர்களோ தொடர்பு கொள்ளுங்கள். ஜாதி, மதம் தடையில்லை. வயது 27, உயரம் 160,
தொடர்புக்கு: 90807 77707

# பசுக்களைப் பட்டினி போட்டுக்கொல்லும் பா.ஜ.க அரசு

தமிழில்: பேராசிரியர் சதாம் உசேன்

இராஜஸ்தான் மாநிலம், இந்திய அளவில் மாடுகளின் பாதுகாப்புக்காக முதல் முறையாக தனி அமைச்சகத்தை அமைத்த மாநிலமாகும்.

இராஜஸ்தான் மாநிலம்,தி ஹிங்கோனியாவில், இந்திய அரசுக்கு சொந்தமான ஆசிய நாட்டின் "சிறந்த" கோசாலை உள்ளது. இங்கு உள்ள பசுக்கள் 14 கால்நடை மருத்துவர்கள், 24 கால்நடை உதவியாளர்கள் மற்றும் 200 உதவி ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ளன.

இங்கு, இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஜூலை 31 வரை உணவு மற்றும் பராமரிப்புக் குறைபாடு காரணமாக 8,122 பசுக்கள் இறந்துவிட்டதாகவும், சராசரியாக, ஒவ்வொரு மாதமும் 1,053 மாடுகள் இறப்பதாகவும், 500 க்கும் மேற்பட்டவை கடந்த 10 நாட்களில் அழிந்துவிட்டதாகவும் இராஜஸ்தான் அரசு அறிவித்துள்ளது. இந்த நிகழ்வு ஆயர்களின் நலனுக்காகச் செயல்படும் ஆர்வலர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களிடையே அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

ஹிங்கோனியா மறுவாழ்வு மையத்தில் ஆண்டு வாரியாக பசுக்களின் இறப்பு எண்ணிக்கை:

✦ 2012 இல், மொத்தம் 3,743 மாடுகள் மையத்தில் இறந்தன.

✦ 2013 இல் 5,538 மாடுகள் இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

✦ 2014 இல், 7,694 மாடுகள் இறந்தன

✦ 2015 ஆம் ஆண்டில் 12,915 ஆக இறப்பு எண்ணிக்கை அதிகரித்தது.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 7.09 சதவீதத்தில் இருந்த இறப்பு விகிதம், 2016 ஜூலை மாதத்தில் 11.31 சதவீதமாக அதிகரித்துள்ளது என மாநில அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தீவனம் மற்றும் மருத்துவப் பராமரிப்புக்காக, ஹிங்கோனியா கோசாலையில் வருடாந்திர வரவு - செலவுத் திட்டம் 2007 - 08 ல் ரூ. 5.19 கோடியில் இருந்து 2015 - 2016 ல் ரூ.10.78 கோடியாக உயர்த்தப்பட்டது.

தில்லி புறப்பாட்டிற்கு முன்பாக ,வசுந்தரா ராஜே அவர்கள் பிரபு லால் சாய்னி, ராஜ்பால் சிங் ஷெகாவத் மற்றும் ஜெ.எம்.சி. மேயர் நிர்மல் நஹத்தா மந்திரிகளுடன் உயர் மட்டக் கூட்டத்தை நடத்தி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்க் கொள்ள அறிவுறுத்தினார். நான்கு நாட்களுக்குப் பிறகு டெல்லியிலிருந்து திரும்பும் போது கோசாலையை பார்வையிடுவதாகவும் ராஜே கூறினார்.

சனிக்கிழமை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீடமைப்பு அமைச்சர் ராஜ்பால் சிங் ஷெகாவத், ஹிங்கோனியா மாட்டு புனர்வாழ்வு மையத்தில் உள்ள நிலைமைகளை மீளாய்வு செய்து பின்வரும் அறிக்கையை பதிவு செய்தார்.

**ஷெகாவத் அறிக்கை:**

✦ 266 தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை காரணமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், தொழுவங்கள் சுத்தம் செய்யப்படவில்லை மற்றும் விலங்குகளுக்கும் உணவளிக்கவில்லை.

✦ உயிரிழந்த பெரும்பாலான விலங்குகள் ஏற்கனவே நோயுற்றிருந்ததாகவும், காயமடைந் திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் "சாணம் சரிவர நீக்கப் படாததால், மழையினால் நிலைமை மிகவும் மோசமடைந்து, அவை புதை மணல் போல் மாறியதால் விலங்குகள் அதில் சிக்கி இறந்தது" என்றார்.

✦ மேலும், கோசாலை பொறுப்பாளரான ரமேஷ் சர்மா மற்றும் துணை ஆணையாளர் ஷேர் சிங் ஆகியோரை தற்காலிக மாகப் பணி நீக்கம் செய்தார்.

✦ பணியாளர்களின் சம்பளங்களை இனிமேல் காசோலைகளாக வழங்க வேண்டும் என்று ஒப்பந்தக்காரர்களுக்கு ஆணையிட்டார். இனிவரும் காலங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க, இந்த ஆவணங்களை சேகரித்து வைக்க வேண்டும் என்று JMC யிடம் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில், இராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ்கட்சி, அதன் அலுவலகத்தில் இருந்து கோவிந்த் தேவ் ஜி கோயில் வரை "பசுப் பாதுகாப்பு யாத்ரா" வை நடத்தியது.

மாடுகளின் இறப்பினைக் கண்டிக்கும் விதமாக, ஹரியானாவில் உள்ள ராஷ்டிரிய காவ் சாண்ட் அமைப்பின் கோபால்தாஸ் மகாராஜ் தலைமையிலான மாடு கண்காணிப்பாளர்கள் மாலையில் 144 தடை உத்தரவை மீறித் தலைமைச் செயலகத்தினுள் நுழைய முயன்ற போது சுற்றி வளைக்கப்பட்டனர். மீண்டும் கோபாலதாஸ் குழுவினர் மெழுகுவர்த்தி ஏந்தி அணிவகுத்துச் சென்றனர்.

காங்கிரஸ் மாவட்ட தலைவர் மற்றும் பி.சி.சி செய்தித் தொடர்பாளர் பிரதாப்சிங் கச்சாரியா வாஸ், "பி.ஜே.பி அரசாங்கம் பசுக்களின் பெயரில் அரசியலைச் செய்கிறது, ஆனால் ஒவ்வொரு நாளும் ஹிங்கோனியாவில் நூற்றுக் கணக்கான பசுக்கள் இறந்து போயிருக்கின்றன. விலங்குகள் மையம்

சரிவரச் செயல்படாததால், JMC- க்கு மாடுகளை இனிமேல் விடப்போவதில்லை என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த மையம் ஒரு மரணப் பொறியாக மாறிவிட்டது. மேலும் அனைத்துசமுதாய மக்களும் அரசாங்கத்திற்கும், பசுக்களின் அவமானகரமான சிகிச்சைக்கு எதிராகவும் ஒற்றுமையாக நிற்கின்றனர்" என்று கூறினார்.

கடுமையான பசி மற்றும் அங்கு பெய்த கனமழையினால் விலங்குகளின் கால்கள் அதன் சாணக்கழிவுகளில் சிக்கி உயிரிழந்துள்ளது, அரசின் அலட்சியத்தன்மையை சல்லடையிட்டு விளக்குகிறது.

சரியான உணவு மற்றும் பராமரிப்பு இல்லாமல் இறந்து போகும் ஆயிரக்கணக்கான மாடுகள், மாட்டிறைச்சிக்கு தடை விதித்து மாடுகளைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும் நமது மத்திய அரசின் பார்வையில் படாதது ஏனோ?

**குஜராத்தில் தலித்துகளின் சுயமரியாதை முழக்கம்**

குஜராத் வாழ் தலித் மக்களிடையே அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுயமரியாதைக்கான ஒரு புரட்சி வெடித்துள்ளது. சென்ற மாதம், குஜராத்தில் தலித்துகளுக்கு எதிராக நடந்த வன்முறைகளின் விளைவாக இறந்த விலங்குகளின் உடல்கள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த மறுப்பு தெரிவித்தனர். இது தேசிய அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது. இதனால் குஜராத்தில் வீதியோரங்களில் விலங்கு கழிவுகள் அழுகிய நிலையில் தேங்கியுள்ளது.

சுமாராக, குஜராத்தில் பத்து மில்லியன் பசுக்கள் உள்ளன. அவைகளில் தினந்தோறும் மாநிலம் முழுவதும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பசுக்கள் இறக்கின்றன. இந்த இறந்த விலங்குகளின் உடல்கள் அப்புறப்படுத்தப்படாமல் அழுகிய நிலையில் தேங்கியுள்ளதால் உயிர் கொள்ளும் நோய் பரவும் அபாயம் உள்ளதாக வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 31 ல், அஹமதாபாதில் நடைபெற்ற தலித்துகளுக்கான மாநாட்டில், அவர்கள் அவர்களுடைய பாரம்பரியத் தொழில்களான கழிவுகளை அகற்றுதல், இறந்த உடல்களை அப்புறப்படுத்துதல் மற்றும் விலங்குகளின் தோல்களை உரித்தல் போன்றவற்றை சுயமரியாதைக்கு பங்கம் விளைவிப்பதாக கருதிக் கைவிடுவதாக சபதமெடுத்தனர். இந்த உறுதிமொழிகளை வலியுறுத்தும் விதமாக ஆகஸ்ட் 15 இல் 'உனா' வில் பேரணி நடத்தினர்.

இறந்து போன மாடுகளின் தோல்களை உரிக்க மறுத்த நான்கு தலித் இளைஞர்கள் பசுப் பாதுகாவலர்களால் அடித்து கொல்லப்பட்டனர். இதனைக் கண்டித்து தலித் சமூகத்தினர் போராட்டம் நடத்தினர். இதற்கு அதிகாரிகள் தரப்பில், இந்தப் போராட்டமானது எந்தவித விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை எனவும், மாநிலம் முழுவதும் தேங்கியுள்ள இறந்தபோன விலங்குகளின் உடல்களை அப்புறப்படுத்த நேரம் அடிப்படையிலான சோதனை முறை அறிமுகப் படுத்தப்படும் எனவும் பதிவு செய்தனர்.

குப்பைகள் மற்றும் இறந்த விலங்குகளை அப்புறப்படுத்த மாநிலத்தில் உள்ள 8 மாநகரங்கள், 33 மாவட்டங்கள் மற்றும் 249 வட்டங்களுக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் என 30,000 பேர் செயல்படுத்தப்படுவார்கள் என அவர்கள் கூறியுள்ளனர்.

அந்த நகரங்களில் வாழக்கூடிய தலித்மக்கள், இந்தத் தொழில்கள் எங்களின் வாழ்வாதாரத் தோடு ஒன்றிணைந்து இருப்பதால் இதை விட்டுச்செல்ல முடியாது என்றும் ஒரு கருத்தினைப் பதிவு செய்கின்றனர்.

அஹமதாபாத் நகராட்சியில் பணியாற்றக் கூடிய ஜிதேஷ் சோலங்கி என்பவர், "நான் மாதந்தோறும் 22,500 ரூபாய் சம்பாதிக்கிறேன். என்னால் எனது சமூகத்தினரின் அவலநிலையை புரிந்துக்கொள்ள முடிகிறது, அதற்காக இந்த வேலைகளைச் செய்யாவிட்டால் எனது குடும்பத்திற்கு வருமானமே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்" என வருத்தம் தெரிவித்துள்ளார்.

அந்த மாநிலத்தில் 285 மாட்டு கொட்டகைகளில் 2,00,000 பசுக்கள் உள்ளன. அந்தக் கொட்டகைகளில் ஆண்டு ஒப்பந்த முறையில் கழிவுகளை அப்புறப்படுத்தும் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் சில கிராமங்கள் மட்டும் தான் தலித்துகள் வெளியேறியதால் இந்த பிரச்சனைக்கு ஆளாகியுள்ளதாகவும், எந்த நேரத்திலும் மாவட்ட அலுவலகத்தின் உதவியை நாடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தலித் போராட்டத்தின் மையப்புள்ளியான 'உனா' வில் கூட இந்த போராட்டம் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை எனவும், கடந்த ஒரு மாதத்தில் எந்த கிராமத்திலும் இறந்த விலங்குகளின் உடல்கள் அப்புறப்படுத்தப்படாமல் தேங்கவில்லை எனவும் கிர்சோம்நாத் மாவட்ட ஆட்சியாளர் அஜய் குமார் அறிவித்துள்ளார்.

ஆனால் இறந்த நான்கு இளைஞர்களின் உறவினர்களும், சமூகத்தினரும் இன்றுவரை நாங்கள் இந்தத் தொழில்களில் இருந்து ஒதுங்கிதான் இருக்கிறோம் என்று ஆட்சியரின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை விடுத்தனர். இறந்த இளைஞர்களின் உறவினரான கேவல் ரத்தோட் என்பவர், அந்த நிகழ்விற்குப் பிறகு இன்று வரை யாரும் தொழில் செய்யவில்லை என்று கூறினார். இந்த முடிவு எங்கள் சமூகத்தினருக்கு சுயமரியாதையை பெற்று தந்து விட்டது எனவும், அநீதிக்கு எதிராக பிற தொழில் செய்பவர்களும் எங்களுடன் இணைந்து போராட விழைகிறார்கள் எனவும் இந்தப் போராட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் வழக்கறிஞரான ஜிக்னேஷ் மெவானி அறிவித்துள்ளார்.

- TheTribune 06.08.2016, Deccan Herald07.08.2016,
Hindustan Times 21.08.2016.



# மாட்டுக்கறி வித் கள்ளு

## பா.ஜ.க வின் மூன்று ஆண்டு சாதனை விளக்க விருந்துக்கு அழைப்பு

மோடி அரசின் மாட்டிறைச்சித் தடைக்கு எதிராக, இந்தியா முழுவதும் கடும் எதிர்வினைகள் எழுந்துள்ளன. மேகாலயா மாநிலத்தில் பா.ஜ.க விற்குள்ளேயே மிகக்கடுமையான எழுந்துள்ளன. ஏற்கனவே மேகாலயா பா.ஜ.க வின் கிழக்கு காரோ மாவட்டத் தலைவர் Bernard Marak என்பவர் மாட்டிறைச்சித் தடைக்கு எதிராகப் பதவி விலகி விட்டார். இன்று, மேகாலயா பா.ஜ.க வின் கிழக்கு காரோ மாவட்டத் தலைவர் க்ஷயஉஊர ஆயசயம அவர்களும் பதவி விலகுவதாக அறிவித்து விட்டார்.

பதவி விலகியது மட்டும் முக்கியத்துவம் கொண்ட செய்த அல்ல. அதையும் தாண்டி அவர்து முகநூல் பக்கத்தில் ஒரு விருந்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். அந்த அழைப்புதான் திராவிடர் பண்பாட்டின் வீர அடையாளம்.

அதாவது, வரும் ஜூன் 10 ஆம் நாள் மேகாலயா மாநிலம் டுரா என்ற நகரத்தில் ஆர்.பி. ஏடன் என்ற இடத்தில் "க்ஷவைஉாை யனே க்ஷநநக யீயசவல" என்ற பெயரில் ஒரு விருந்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.


பா.ஜ.க அரசின் மூன்று ஆண்டு சாதனையை விளக்கி இந்த விருந்து நடக்க உள்ளது. க்ஷவைஉாை என்றால், மேகாலயாவில் பயன்படுத்தப்படும் கள்ளு ஆகும். நம்ம ஊர் சுண்டக்கஞ்சி போல அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் மது வகை.

கள்ளுடனும் மாட்டிறைச்சியுடனும் பா.ஜ.க வின் சாதனை விளக்க நிகழ்ச்சி நடைபெறஉள்ளது. அதற்கு கட்டணமும் அறிவிக்கப்பட்டுள்ளது. காரில் வருபவர் களுக்கு ரூ 200, இரு சக்கர வாகனத்தில் வருபவர்களுக்கு ரூ 100, நடந்து வருபவர்களுக்கு ரூ 50 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பதவி விலகிய பெர்னார்டும் இதில் கலந்து கொள்ள உள்ளார்.

இந்த, கள்ளு வித் மாட்டுக்கறி விருந்துக்கு மேகாலய மாநில பா.ஜ.க தலைமையும், அகில இந்திய தலைமையும் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. ஆனால் பதவி விலகியவர்களோ,

"மாட்டிறைச்சி என்பது எங்கள் பண்பாடு, பா.ஜ.க வின் மதச்சார்பின்மைக்கு எதிரான போக்கை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று கூறியுள்ளனர். மேகாலயா, நாகாலாந்து போன்ற வடமேற்குப் பகுதிகளில் பயணம் செய்தால், அவர்களின் பல பண்பாடுகள் திராவிடர் பண்பாட்டோடு இணைந்து நிற்பதைக் காணலாம். அதன் மற்றொரு வெளிப்பாடு தான் *"Bitchi and Beef party"*. தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் கூட வெறும் மாட்டுக்கறி விருந்துகள் தான் நடந்தன. மேகாலயா நாகர்கள் நம்மை விஞ்சிவிட்டார்கள்.

BITCHI AND BEEF PARTY



# பெரியார்– அம்பேத்கர்: படம் தேவையா? பாடம் தேவையா?

க.பெரியார்நம்பி

பித்தம் தலைக்கேரிய சில பைத்தியக் காரர்கள் இட்டுக்கட்டி கட்டிவிட்ட கட்டுக்கதை வட மாவட்டங்களில் தொடங்கி தென் மாவட்டங் கள் வழியாக மேற்கு மாவட்டங்களிலுள்ள ஒருசில தலித் இளைஞர்களைக் குழப்பிக் கொண்டுள்ளது.

முன்னுக்குப்பின் முரணான செய்திகளை உண்மைபோல் ஜோடித்து மக்களைக் குழப்புவதில் கைதேர்ந்தவரான பெங்களூர் குணா என்பவர், பாட்டாளி மக்கள் கட்சிக்காக எழுதிய ஒரு கட்டு ரையை 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற தலைப்பில் புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டார்.

அதிலுள்ள உண்மைக்குப்புறம்பான செய்தி களை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி மக்கள் கட்சிக்கு நேர் எதிரானவர் என்று தன்னைக் காட்டிக்கொண்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் இரவிக் குமார் அவர்கள், பெரியார் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவர் எனத் தொடங்கி வைத்த கோயபல்ஸ் பிரச்சாரம் வட தென் மாவட்டங்களில் எடுபடாத நிலையில் தற்போது மேற்கு மாவட்டங் களைக் குறி வைத்து நகர்ந்துள்ளது.

*1957*-ல் ஜாதி வெறியர்களால் தோழர் இம்மானுவேல்சேகரன் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டபோது ஓட்டு வங்கி அரசியலை மனதில் வைத்து, தி.மு.க, கம்யூனிஸ்ட் உட்பட அனைத்துத் தலைவர்களும் வாய்மூடி மௌனமாக இருந்தபோது, தோழர் இம்மானுவேல்சேகரன் படு கொலையை வன்மையாகக் கண்டித்து விடுதலையில் எழுதியதோடு மட்டுமல்லாமல், தோழர் இம்மானு வேல்சேகரன் அவர்களின் மனைவி, மகளிடம் பேட்டி எடுத்து விடுதலையில் செய்தி வெளியிட்டுத் தனது ஆதரவினைத் தெரிவித்தார்.

தோழர் இம்மானுவேல்சேகரன் படுகொலை யைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தைக் கட்டுப் படுத்த கடுமையான நடவடிக்கை தேவை என விடுதலையில் எழுதியதைத் தொடர்ந்து அன்றைய முதல்வர் பச்சை தமிழர் காமராஜர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, கலவரத்தில் ஈடுபட்ட சில பிற்படுத்தப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு கலவரம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தோழர் இம்மானுவேல்சேகரன் படு கொலைக்குக் காரணமான முத்துராமலிங்கம் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுத் தண்டிக்கப்பட்ட தற்குக் காரணமாகப் பெரியார் இருந்தார் என்ற காரணத்திற்காக, தலைவர் பெரியார் இறந்தபோது, தென்மாவட்டங்களில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத் தைச் சார்ந்தவர்கள் இனிப்பு வழங்கிக் கொண்டாடி னார்கள் என்ற செய்தி பெரியார் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு மட்டுமான தலைவர் அல்ல என்பதைக் கூறுகிறது.

தமிழகத்தில் சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரே ஒரு பிரதிநிதி மட்டும் ஒதுக்கியதை மிகவும் கடுமையாக எதிர்த்துக் கண்டித்து அறிக்கைவிட்டுப் போராடியவர் தோழர் பெரியார்.

1930 ல் நீதிக்கட்சி காலத்திலேயே இந்துசமய அறநிலையத்துறையில், தாழ்த்தப்பட்டவரையும் உறுப்பினராகச் சேர்க்க வைத்தவர் தோழர் பெரியார்.

தமிழகத்தில் பெரியார் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது அக்கட்சியின் சார்பாக சேரியில் வெட்டப்பட்ட குடிநீர் கிணற்றை திறந்து வைத்துப் பேசிய போது பெரியார், "இந்தக் கிணற்றில் தண்ணீர் எடுத்து குடித்து உயிர்வாழ்வதைவிட பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தில் உயிர்விடுவது மேலானது" என்று தாழ்த்தப்பட்டவர்களைப் பார்த்து உரிமைக்குரல் எழுப்பினார்.

கலைஞர் அவர்கள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அடுக்குமாடித் திட்டம் அறிவித்தபோது, அந்தத் திட்டத்தினால் அம்மக்களை சேரி போன்று ஒதுக்கி வைக்காமல் அனைவரும் வாழும் ஊருக்குள் வீடுகளை அமைத்துத்தர வேண்டும் என்று அறிக்கைவிட்டு அதன் பயனாய் மதுரை, சென்னை போன்ற பெருநகரங்களில் நகரின் மையப்பகுதியில் வாழ வைத்தவர் பெரியார்.

ஈரோடு நகரசபைத் தலைவராக இருந்த தோழர் பெரியார், இந்தியாவிலேயே முதன் முறையாக மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் முறையை அமுல் படுத்தியபோது, பலத்த எதிர்ப்பிற்கிடையில் சேரி மக்களும் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கும் உரிமையை வழங்கியவர்.

இதுபோன்ற ஆயிரக்கணக்கான சான்றுகளை அடிக்கிக்கோண்டே போகலாம் சரி பெரியாரைக் கொச்சைப்படுத்துகின்ற தலித் அறிவுஜுவிகள் அம்பேத்காரையாவது படமாகப் பார்க்காமல் பாடமாக முழுமையாக உள்வாங்கியிருக்கின்றார் களா? என்று பார்ப்போம்.

**சில தலித் அமைப்புத் தலைவர்களின் இந்துமத ஆதரவுப் போக்கு**

தோழர் பெரியாரைப்போலவே அனைத்துத் தரப்பு மக்களும் எல்லா உரிமைகளும் பெற்று அனைவரும் சமமாக வாழவேண்டும் என்று அரும்பாடுபட்ட தலைவர் தோழர் அம்பேத்கர். பார்ப்பனர்களைத் தவிர வேறுயாரும் சமஸ்கிருதம் படிக்கக்கூடாது என்ற மனுதர்ம விதியை மீறி முறைப்படி சமஸ்கிருதம் கற்றவர். அதனால் வேத புராணங்களை அலசி ஆராய்ந்ததில் அவை அனைத்தும் இந்து மதத்தின் பேரால் ஜாதி சனா தனத்தைக் காப்பாற்றச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளே என்பதை உணர்ந்த அம்பேத்கர், "நான் இந்துவாகப் பிறந்தது என் குற்றமல்ல; ஆனால் இந்துவாகச் சாகமாட்டேன்" என்று சூளுரைத்து பத்து இலட்சம் மக்களைத் திரட்டி இந்து மதத்திலிருந்து வெளியேறி புத்த மதத்தைத் தழுவினார்.

அப்போது பிரம்மா, சிவன், விஷ்ணு, விநாயகன் போன்ற இந்துக் கடவுள்களை வணங்க மாட்டேன். இந்து மதம் கற்பித்துள்ள சாஸ்த்திர சடங்குகளைக் கடைபிடிக்கமாட்டேன் என்பது போன்ற உறுதிமொழிகளை அவர் முன்மொழிய பத்து இலட்சம் மக்கள் வழிமொழிந்து இந்து மததிலிருந்து வெளியேறினார்கள்.

அதுமட்டுமல்லாது சாதியை ஒழிக்க வழி என்ற நூலில் சாஸ்திரங்கள் புனிதம், சடங்குகள் புனிதம், கடவுள் தன்மை புனிதம் என்ற நம்பிக்கை இருக்கும்வரை சாதியை ஒழிக்க முடியாது. அந்த நம்பிக்கைகளிலிருந்து மக்களை வெளிக்கொணரா மல் சாதியை ஒழிக்கவே முடியாது என்று சாதி ஒழிப்புக்குச் சரியான தீர்வுச் சொல்லி இவற்றுக் கெல்லாம் ஒட்டுமொத்த காரண கர்த்தாவான இந்து மதத்தை ஒழிக்காமல் சாதியை ஒழிக்க முடியாது, என்பதைத் தன் வாழ்நாள் கடைமையாகக் கொண்டி ருந்தவர் தோழர் அம்பேத்கர்.

தோழர் அம்பேத்கரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் தலித் அறிவு ஜுவிகள் தலித் மக்களை இழிவுபடுத்தும் இந்து மதத்திலிருந்து அவர்களை விடுவிக்க என்ன செய்தார்கள்?

> **“ மதுரைவீரனோ, குதிரைவீரனோ, அய்யனாரோ, கருப்புச் சாமியோ.... இந்த சில்லறைத் தெய்வங்களின் கோவில்களில் படையல் போடுவதை நிறுத்தும் வரை தலித்து களுக்கு விடிவு ஏது? இதை அறிவுறுத்தும் தலைவர்கள் யார்?**

சேரிகளில் தனியாக, மாரியம்மன், காளி யம்மன், சாம்பசிவன், மதுரைவீரன், காத்து, கருப்பு களுக்கு விழாக் கொண்டாட வேண்டாம் என்று அறிவுறுத்தும் தலித் அமைப்புத் தலைவர் யார்?

மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், திருவிழாக்களில் அறியாமையில் அந்தத் தொண்டர் கள் தோழர் அம்பேத்கர் படம் போட்டு வைக்கின்ற ப்ளக்ஸ் போர்டுகள் தவறென்று அந்தத் தொண்டர் களுக்கு அறிவுரை கூறிய தலைவர்கள் யார்?

குலதெய்வக்கோவிலில் மொட்டை அடித்தல், கிராமக் கோவில் விழாக்களில், தனியாகப் பொங்கல் வைத்தல், நாட்டார் தெய்வக் கோவில் விழாக்களில் அடிமை வேலைகளைச் செய்தல், நுழையவே அனுமதிக்காத தெய்வங்களைத் தூக்கி எறிய அறிவுறுத்ததல் போன்றவற்றைச் செய்யும் தலித் அமைப்புத் தலைவர்கள் யார்?

காதணிவிழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக் களான இந்துமதச் சடங்குகளைத் தலைமை தாங்கி நடத்தி வைக்காத தலித் அமைப்புத் தலைவர்கள் யார்?

இறந்த பிறகும் தனிச்சுடுகாட்டில் புதைக்கப் படும் அவலத்தை எதிர்த்துக் குரல்கொடுக்காமல்,

அந்தத் தனிச்சுடுகாட்டிலும், இறப்புச் சடங்குகளைத் தவறாமல் பின்பற்றுபவர்களைத் தடுத்த, அறிவுரை கூறிய தலைவர்கள் யார்?

மாட்டிறைச்சித் தடைக்கு எதிராக, மாடறுக்கும் போராட்டம் என்று அறிவித்தாலும், அதையும் மதுரைவீரன் கோவிலில் படையலிடும் போராட்டமாக நடத்துகிறார்கள். மதுரைவீரனோ, குதிரைவீரனோ, அய்யனாரோ, கருப்புச் சாமியோ.... இந்த சில்லறைத் தெய்வங்களின் கோவில்களில் படையல் போடுவதை நிறுத்தும் வரை தலித்துகளுக்கு விடிவு ஏது? இதை அறிவுறுத்தும் தலைவர்கள் யார்?

**"இன்று நாடு முழுவதும் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவிக்கின்ற 27 சதம் இடஒதுக்கீட்டிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து மந்திரி பதவியைத் தூக்கி எறிந்த தோழர் அம்பேத்கர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் உழைத்த தலைவராவர்.**

திருமண நேரங்களில் ஜாதகம், ஜோசியம், நல்லநாள், நல்லநேரம், ஜாதி அடிப்படையிலான தாலிவகை, பட்டுச்சோலை, பட்டு வேட்டி, தலித்களுக்குள்ளேயே அவரவர்களுக்குரிய உட்பிரிவு என்று பார்க்க வேண்டாம் என்று அறிவுறுத்தும் தலித் அமைப்புத் தலைவர் யார்?

இந்த மூடத்தனமான சடங்குகளிலிருந்து இவையெல்லாம் புனிதம் என்ற நம்பிக்கையிலிருந்து இம்மக்களை மீட்டெடுத்த தலைவர்கள் எத்தனை பேர்? சாதிகளை அப்பட்டமாகக் காப்பாற்றும் இந்து மதப் பண்டிகைகள் கொண்டாடாத தலித் அறிவு ஜீவிகள் எத்தனைபேர்?

அம்பேத்கர் பிறந்த நாட்களில் முளைப்பரி எடுப்பது, பால்குடம் எடுப்பது, இம்மானுவேல் சேகரன் குருபூஜையில் முளைப்பாரி எடுப்பது, மொட்டை அடிப்பது, பால்குடம் எடுப்பது போன்ற அசிங்ககங்களும் அரங்கேறிக்கொண்டுதான் உள்ளன. இந்தச் செயல்களை எந்த தலித் தலைவர்களும் கண்டித்ததாக ஒரு பெட்டிச் செய்தியைக் கூடக் காண முடிவதில்லை. குறைந்தபட்சம் இந்த அறிவுஜுவிகள் அம்பேத்கரின் **"சாதியை ஒழிக்க வழி"** என்ற நூலை வாசித்திருப்பார்களா என்பதும் அய்யமே.

நாள்தோறும் தீண்டாமைக் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் சாதாரண மக்களின் வேதனை என்னவென்றே உணராமல் குளு குளு அறைகளில் அமர்ந்து கொண்டு, பதவி சுகத்திற்காக இந்துத்துவ அமைப்புகளோடு கைகோர்த்துக் கொண்டு, **"நாங்கள் தலித்துகள் அல்ல; எங்களை பட்டியலினப் பட்டியலினத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள், நாங்கள் தேவேந்திரர்கள்"** என்று கூறுவதைக் கேட்கும் போது 16 - வயதினிலே படத்தின் காட்சி ஒன்று நினைவுக்கு வருகிறது.

சப்பாணியாக அறிமுகமான நடிகருக்கு கோபாலகிருஷ்ணன் என்று பெயர் சொல்லி அழைக்கச் சொல்லி கதாநாயகி சொல்லிக்கொடுக்க அடுத்த காட்சியில் உன்னை எல்லோரும் கோபாலக் கிருஷ்ணன் என்றுதானே அழைக்கிறார்கள் எனக் கதாநாயகி கேட்க எவங்கூப்பிடுறான் எல்லாப் பசங்களும் சப்பாணின்னுதான் கூப்பிடுறான் என்று கதாநாயகன் சொல்ல - இனிமேல் உன்னை சப்பாணின்னு எவனாச்சும் கூப்பிட்டா... சப்புன்னு அறஞ்சிடு... என்று சொல்ல, அப்படி ஒருவன் அழைக்க சப்புன்னு அறைந்த கதைதான் நினைவுக்கு வருகிறது.

உடுமலையில் சங்கர் படுகொலை செய்யப்பட்டது அவர் பள்ளர் என்று கள்ளர் நினைத்த ஜாதி வெறிதான். அங்கு சங்கர் கள்ளர்களுக்குத் தேவேந்திரராகத் தெரியவில்லை. திருச்செங்கோட்டில் கோகுல்ராஜ் தலை கொய்யப்பட்டதும் கோகுல்ராஜ் அங்கிருந்த கவுண்டருக்கு பறையர் என்றுதான் தெரிந்தது. தருமபுரியில் கொன்று தண்டாவளாத்தில் வீசப்பட்ட இளவரசனை அங்கிருந்த வன்னியர் பறையர் என்று பாவித்ததால் படுகொலை செய்யப்பட்டார்.

நீங்கள் என்னதான் தேவேந்திரர், அருந்ததியர் என்று மாற்றிக் கொண்டாலும் நடைமுறையில் ஏதுமறியா அப்பாவி மக்கள் பள்ளர், பறையர், சக்கிலியராகத்தான் நடத்தப்படுகிறார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்கும்போதுதான் நாம் தாழ்ந்து கிடக்கிறோம் என்ற உணர்ச்சி வருகிறது அதற்கெதிராகப் போராடவேண்டும் என்ற எழுச்சி வருகிறது.

சப்பாணி என்றதும் சப்புன்னு அறைந்த அந்தக் கதாநாயகனின் மனநிலை வருகிறது. சில தலைவர்கள், சுகபோக அரசியல் இலாபத்திற்காக, இந்துத்துவப் பாசிச சக்திகளோடு கைகோர்த்துக் கொண்டு, அப்பாவி தலித் மக்களின் வாழ்க்கையைச் சிதைத்து வருகிறார்கள். வடநாட்டைப்போல் தாழ்ந்து கிடக்கும் மக்களை இந்துக்கள் என்ற மாய வார்த்தைகளில் மயக்கி தாழ்ந்து கிடப்பதைச் சுகமாக நினைத்துக் கொண்டு நாள்தோறும் சித்ரவதைகளுக்கு ஆளாகிச் செத்துச் செத்துப் பிழைக்கும் இராமராஜ்திற்கு இம்மக்களை இட்டுச் சென்று விடாதீர்கள்.

**பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் உழைத்த தலைவர்**

பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட கோணங்களைக் கண்ட அம்பேத்கர் பிற்படுத்தப்பட்ட தன்மையை அறிந்துக் கொள்ள ஒரு ஆணையம் தேவை என்பதை உணர்ந்தார். எனவே தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்க வேண்டும் என பிரதமர் நேருவிடம் கோரிக்கை வைத்தார்.

அந்த ஆணையம் அமைக்கப்படக்கூடாது என்று பார்ப்பனர்கள் முடிவு செய்து உள்துறை அமைச்சர் படேல் மூலமாக, பிரதமர் நேருவுக்கு

நெருக்கடி கொடுத்தார்கள். அதேபோல் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையில் இந்து திருமணச் சட்டத்தில் திருத்தம் தேவை என்றும் அம்பேத்கர், நேருவிடம் கோரிக்கை வைத்தார்.

இந்த இரண்டு முக்கிய கோரிக்கைகளுடன் இன்னும் சில கோரிக்கைகள் வைத்து நேருவிடம் போராடி முடியாமல் போகவே மக்களுக்குப் பயன் படாத மந்திரி பதவி தேவை இல்லை என முடிவு செய்து, இராஜினாமா செய்வதாக அறிவித்தும் பார்ப்பன உயர்சாதியினர் நெருக்கடியால் அம்பேத் கரின் கோரிக்கை நிறைவேறாமல் போகவே பாது காப்பு அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

> **“ ஆரிய அழிப்பு, இந்து மத அழிப்புத் தலைவர்களின் எண்ணங்களை நிறை வேற்றப் பாடுபடுகிறோமா? இல்லையா? என்பதை மட்டுமே விவாதங்களாக்க வேண்டும். அப்படிப் பட்ட விவாதங்களை எவரும் முன்னெடுப்பதில்லை. அதன் விளைவாகத்தான் தோழர் அம்பேத்கரை இந்து மதம் விழுங்கப்பார்க்கிறது.**

நேருவிற்குப் பின் இந்திராகாந்தி பிரதமர் ஆகியும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அமைக்கப்படவில்லை. அதன்பிறகு பிரதமரான மொராஜிதேசாய்தான் ஓய்வுபெற்ற நீதிபதி பி.பி.மண்டல் தலைமையில் ஆணையம் அமைத்து அந்த ஆணையம் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அறிக்கையைத் தாக்கல் செய்த போது, மொராஜிதேசாய் அமைச்சரவை இல்லை. தொடர்ந்து வந்த பிரதமர்கள் இந்திராகாந்தி, இராஜீவ் ஆகியோர் அந்த அறிக்கையைக் கிடப்பில் போட்டனர். சமூக நீதிக்காவலர் வி.பி.சிங் மண்டல் பரிந்துரையை அமுல்படுத்தி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பில் 27 சத இடஒதுக் கீட்டை அமுல்படுத்தி ஆட்சியை இழந்தார்.

இன்று நாடு முழுவதும் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவிக்கின்ற 27 சதம் இடஒதுக்கீட்டிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து மந்திரி பதவியைத் தூக்கி எறிந்த தோழர் அம்பேத்கர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் உழைத்த தலைவராவர்.

### அம்பேத்கர் படம் தேவையா? பாடம் தேவையா?

தீண்டாமை வன் கொடுமைகளுக்கு எதிராக மட்டுமே போராடிக் கொண்டிருந்தால், இந்து மதம் உயிர் வாழும் வரை போராடிக்கொண்டு மட்டுமே இருக்க முடியும். தீண்டாமை வன்கொடுமைகளை எதிர்த்துச் சமரச மின்றிப் போராட வேண்டும். அதே அளவுக்கு தீண்டாமைக் கொடுமைகளுக்குக் காரணமான இந்து மத அழிப்புக்கும் பாடுபட வேண்டும். இந்த இரண்டையும் ஒரு சேரச் செய்யாதவர்கள் தலித் அமைப்புகளாக இருந் தாலும், பெரியார் இயக்கங்களாக இருந்தாலும், என்.ஜி.ஓக்களாக இருந்தாலும், கம்யூனிச இயக்கங் களாக இருந்தாலும் அவற்றால் இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் எந்தப் பயனும் இல்லை.

பெரியார் இயக்கங்களில், அவர்களது துண்டறிக்கைகளில் அம்பேத்கர் படம் போடுவ தில்லை என்று குற்றம் சாட்டுவதும், அம்பேத்கரிய அமைப்புகளின் துண்டறிக்கைகளில் பெரியார் படம் போடுவதில்லை என்று குற்றம் சாட்டுவதும் நடந்து வருகின்றன. பெரியாருக்குத் ‘தந்தை’ என்று அச்சிடுபவர்கள், அம்பேத்கருக்கு ‘பாபா சாகேப்’ என்று அச்சிடுவதில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன.

ஆனால், எந்தத் தரப்பிலுமே பெரியாரின் கொள்கைகளைச் சொல்லவில்லை. அம்பேத்கரின் கொள்கைகளைச் சொல்லவில்லை என்று ஒருவருக் கொருவர் குற்றச்சாட்டுக்களை எழுப்புவதே இல்லை. சிக்கல் அதுதான். படங்களுக்காகவும், அடையாளங்களுக்காகவும், பட்டங்களுக்காகவும் நாம் முட்டி மோதிக்கொண்டு இருக்கிறோம். இந்த இருவர் மட்டுமே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தலைவர்களா? வேறு எவரும் இல்லையா?

புத்தருக்கும் முன்பே நமக்கான தலைவர் தோன்றியிருக்கிறார்கள். பாடுபட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான அமைப்புகளும், தலைவர்களும் நமக்காக, ஆரியப்பார்ப்பன எதிர்ப்பை - சமத்து வத்தை அடிப்படையாகக் கொண்டு உழைத் திருக்கிறார்கள். அந்த நூற்றுக்கணக்கான தலைவர் களில் எந்தத் தலைவரின் படத்தை வேண்டு மானாலும் அச்சிடலாம். அனைத்துத் தலைவர் களின் படங்களையும்கூட அச்சிடலாம். எந்தத் தலைவரின் படத்தையும் அச்சிடாமல்கூட இயங்கலாம். இதில் எதுவும் தவறில்லை.

ஆனால், அந்த ஆரிய அழிப்பு, இந்து மத அழிப்புத் தலைவர்களின் எண்ணங்களை நிறை வேற்றப் பாடுபடுகிறோமா? இல்லையா? என்பதை மட்டுமே விவாதங்களாக்க வேண்டும். அப்படிப் பட்ட விவாதங்களை எவரும் முன்னெடுப்பதில்லை. அதன் விளைவாகத்தான் தோழர் அம்பேத்கரை இந்து மதம் விழுங்கப்பார்க்கிறது. இது தொடர்ந் தால், இந்துத்துவப் பெரியாரும் தோன்றுவார்.

பெரியாருக்கு, ‘தந்தை’ பட்டம் போட வேண்டாம். அவரது சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டாம். சிலையை வணங்க வேண்டாம். அம்பேத்கருக்கு ‘பாபா சாகேப்’ பட்டம் போட வேண்டாம். அவரது சிலைகளுக்கு மாலை அணிவிக்க வேண்டாம். வணங்க வேண்டாம். அவர்கள் தங்களது தோழர்களிடம் எதிர்பார்த்த, ‘தோழமை’ மட்டுமே தேவை. பெரியாரோ, அம்பேத்கரோ, புத்தரோ யாரை வேண்டுமானாலும் உங்கள் தலைவர்களாக அறிவித்துக் கொள்ளுங்கள். ஆனால், அவர்களைக் கடவுளாக மாற்றி விடாதீர் கள். அவர்களது கொள்கைகளை நடைமுறைப் படுத்துங்கள். அவர்கள் அறிவித்த இலக்குகளை நோக்கி முன்னேறுங்கள்.

**தந்தை பெரியார் வாழ்க!.... பெரியாரியல் ?....**
**பாபா சாகேப் அம்பேத்கர் வாழ்க! அம்பேத்கரியல் ?....**

# ஜாதி–தாலி–சடங்குகள்–தேசிய இனம் கடந்த காதலர்கள்

## சாந்தி – கா.சு.நாகராசன்



தமிழ்நாட்டின் மேற்கு எல்லையில் பொள்ளாச்சியைக் கடந்து, கேரளா செல்லும் சாலையில் உள்ள கா.க.புதூர் என்ற ஒரு மிகச்சிறிய கிராமத்தில் பிறந்து,வளர்ந்து தமிழ்நாடு முழுவதும் பெரியாரியலைப் பரப்பி வருபவர் தோழர் கா.சு.நாகராசன். பெரியாரியலைப் பரப்புவதைப் போலவே, தனது வாழ்விலும் நடைமுறைப் படுத்தியவர் என்ற பெருமைக்கு அவரை உயர்த்தி வருபவர் அவரது துணைவியார் சாந்தி. இவர்களது திருமணமானது, ஜாதி - தாலி - தேசிய இனம் - மதச்சடங்குகள் கடந்த திருமணமாகும்.

**கா.சு.நாகராசனின் குடும்பம் பற்றி..**

*நான் அடிப்படையில் ஒருகிராமத்துக்காரன். கிராமத்திலும் குலத்தொழிலையே வாழ்வாகக் கொண்ட ஒடுக்கப்பட்ட குடும்பத்துப்பிள்ளை. எங்கள் வீட்டின் கடைசிப்பையன் என்கிற செல்வாக்கில் பள்ளிப்படிப்பைப் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றவன். எனது பெற்றோர் காவேரி - சுப்பிரமணியம். குலத்தொழிலை உயிராய் மதித்து உண்மையாய் உழைத்த நேர்மையாளர்கள். நல்ல அடிமைகள். அதேநேரத்தில் வாழ்வில் முன்னேற வேண்டும். நாம் பட்ட கஷ்டங்கள் நம்பிள்ளைகள் படக்கூடாது என்கிற கவலை கொண்ட பாமரப் பெற்றோர்.*

*கால்வயிறு, அரைவயிறுக் கஞ்சிகுடித்து எங்களைக் காப்பாற்றினார்கள். நாங்கள் மூன்றுபேர் சகோதரர்கள். எங்கள் மூவருக்கும் தனித்தனியேவீடு, இடம், தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டே என்தந்தை தன் உழைப்பை நிறுத்தினார்.*

*என்னுடைய பெரியாரியல் பணிகளுக்கு என்மொத்தவீடும் ஆதரவளித்துத் துணைநின்றது. இந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தில் நான்மேற்க் கொண்ட சாதிஒழிப்பு, சுயமரியாதை - சமதர்மப் பணிகள் எனது கிராமத்திற்குள் மாற்றத்தைக் கொடுத்ததோ இல்லையோ, எனது குடும்பச்சூழலை அடியோடு புரட்டிப்போட்டு விட்டது.*

*சமூகரீதியாக மட்டுமல்ல, பொருளாதார ரீதியாகவும், நாங்கள் மீளமுடியாத பள்ளத்தாக்கில் வீழ்த்தப்பட்டுவிட்டோம். கடந்த 20 ஆண்டுகளில் என்பொருட்டு என்குடும்பத்தினர் அடைந்த, அடைந்துவருகிற இன்னல்கள் கடுமையானது. ஆனால், ஒருபோதும் என்னால், என்கொள்கையால் தான் நாம் இவ்வளவு சிரமத்திற்கு ஆளாகிறோம் என்கிற எண்ணமோ, சின்ன சலிப்போ, சங்கடமோ, என்பெற்றோர், சகோதரர்களிடமிருந்தோ, என்துணைவியாரிடமிருந்தோ எந்தநிலையிலும் வந்தில்லை.*

*என்னளவில் இருந்த பெரியாரியலை நான் கிராமத்துத் தெருக்களில் பேசத்தொடங்கும் போதே எனது வீட்டிற்குள்ளும் நடைமுறைப்படுத்தி விட்டேன். கடந்த 20 ஆண்டுகளில் என் குடும்பத் திற்குள் எந்தவொரு மதசடங்கு சம்பிரதாயங்களும் நடத்தப்படவில்லை. குறிப்பாக, பெண் குழந்தை களுக்கு நடத்தப்படும் சீர் சடங்குகள்கூட நிறுத்தப் பட்டுவிட்டது.*

*எனது திருமணம் முழுமையான சாதி - தாலி - சடங்குமறுப்புத் திருமணம். எனது தந்தையின் மரணத்தில் எள்முனையளவும் சடங்கின்றி அத்தனை உறவுக்காரர்களையும் உடன்படவைத்து உடலை மருத்துவக்கல்லூரிக்கு வழங்க முடிந்தது. இப்படி பெரியாரியலை முழுமையாக ஏற்று அதை மக்களிடையேயும் பரப்புகிற எளிய குடும்பமாக எனது குடும்பம் பெரியார்வழியில் தொடர்ந்து பயணிக்கிறது.*

**இயக்கப்பணி**

*1983 ல் நான் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் போது ஈழத்தில் இனப்படுகொலை நடத்தப்பட்டு அதன் எதிராலியாகத் தமிழகமெங்கும் திரண்ட போராட்டக்களம் என்னையும் இழுத்துவந்தது தொடர்ச்சியாக நடந்த ஈழஆதரவுப் போராட்டங்கள் அன்றைய திராவிடர்கழகத் தோழர்களை அறிமுகப் படுத்தியது. நெற்றி நிறைய சந்தனப் பூச்சோடும் அய்யப்பன் மீது அளவுகடந்த பக்தியோடும் இருந்த என்னை திராவிடர்கழகத் தோழர்களோடு இணைத்துவிட்டது ஈழ ஆதரவுப் போராட்டங் களே!*

1986 என்று நினைக்கிறேன். தோழர் கோவை கு.இராமகிருட்டிணன் அவர்கள் தி.க விலிருந்து நீக்கப்பட்டபின் "அடுத்து என்ன செய்வது?" என்கிறஆலோசனைக்கூட்டம் பொள்ளாச்சியில் நடந்தது. அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் தோழர் மனோகரன் அழைப்பின்பேரால் நான் கலந்துகொண்டேன். அதுதான் எனது அதிகாரப் பூர்வ இயக்கப் பங்கேற்பு.

சரியாக முப்பதாண்டுகளுக்குப் பிறகு 2016 பிப்ரவரி மாதம். ஒருநாள் என் வீட்டிற்கு வந்த அஞ்சலில் நான், கட்சிவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் என்னை அமைப்பிலிருந்து நீக்குவதாகவும் தெரிவித்திருந்தார்கள். காரணம் வேடிக்கையாகத் தெரிந்தாலும் என்னுள் மிகக் கடுமையான வலியை உண்டாக்கியது. அந்தக்கடிதம் படித்த இரவு கண்ணீரில் கரைந்த இரவாகவே போனது.

பெரியாரியல் என்பது ஒருவாழ்வியல் என்றும், அது இந்தச்சமூகத்தை நேசிக்கவும், வாசிக்கவும் கற்றுத்தருகிறது என்றும், அது இந்தச் சமூகத்திற் காகச் சுவாசிக்கச் சொல்கிறது என்பதுமே எனது பணிவான கருத்தாகும். இந்தக் கருத்தின் அடிப்படை யில் நான் கற்றுணர்ந்த பெரியாரியலுக்கு எதிராக அணுவளவும் நான் செயல்பட்டவனில்லை. நான் முப்பதாண்டுகள் பணியாற்றிய இயக்கமும் அப்படிப் பட்டதே என்பதுதான் எனதுமுடிவு. அப்படியிருக்க எதிரிகள்கூட சொல்லத்துணியாத அந்தச்சொல் தோழர்களால் சொல்லப்பட்டதே என்கிறவலி என்னுள் இன்னமும் இருக்கிறது.

மற்றபடிசோர்ந்து போவதும் பின்தங்கிப் போவதும் பெரியாரிஸ்ட்டுகளுக்குப் பொருந்தாத குணங்கள் என்பதால் ஏற்றுக்கொண்ட கொள்கை யில் முன்னைவிடவும் வேகமாக, வீச்சாக என்செயல் பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பெரியார்தி.க - சுயமரியாதை சமதர்ம இயக்கம் என்கிற பெயரில் கொஞ்சம் தோழர் களோடு பொள்ளாச்சி அளவில் இயங்கிக் கொண்டி ருந்தாலும் இப்போது தமிழ்நாடு முழுமையும் சென்று பல்வேறு இயக்கக் கூட்டங் களில் பங்கேற்று இயன்றளவு பணியாற்றி வருகிறேன்.

இன்றைய அரசியல் சூழல்கள் பெரியாரி யலுக்குக் கடும்சவாலானதாக இருக்கிறது. பார்ப்பன வல்லாதிக்கம் சகல வலிமையோடும் வெகுசிறப்பான தொலைநோக்குத் திட்டங்களோடும் தன் இருப்பைக் காத்துக்கொள்ளும் போரைச் செயல் படுத்தி வருகிறது. பார்ப்பனர் அல்லாதார் சமூகத்திற் கான "பார்ப்பன எதிர்ப்புப்" போர் அப்படிஒரு மிகப் பெரிய வலிமையோடு தொடுக்கப் படுகிறதா? என்று நம்மை நாமே சுயபரிசோதனை செய்யவேண்டிய நேரம் வந்திருப்பதாக நான் சிலஆண்டுகளாகவே கூறிவருகிறேன்.

பகுத்தறிவுத் தொலைநோக்குக்கொள்கை கொண்ட நம்மைக்காட்டிலும் வேகமாகவும், வலிமையாகவும் பிற்போக்காளர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதும் அதற்கான எதிர்நடவடிக்கைகளில் நாம் தொடர்ந்து பின்தங்கி வருகிறோம் என்பதும் எனது எண்ணமாக இருக்கிறது. இதுதவறாகக்கூட இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படித்தோன்றுகிறது.

எனவே, பெரியார், அம்பேத்கரிய, மார்க்சியக் களப்பணியாளர்கள் ஒன்றுகூடிச் சிந்திக்க வேண்டிய தருணம் இது என்பதும் அதற்கானமுயற்சிகளில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்பதும் எனது தாழ்மையானகருத்து. நான் அந்தமுயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறேன்.

**திருமணம்**

காதல்திருமணம்தான். நானும் தோழர் சாந்தியும் மணம் முடித்துக்கொண்டு சேர்ந்து வாழ்வது என்கிற எங்கள் முடிவை வீட்டில் சொல்லி அவர்களை நிச்சயிக்க வைத்தோம்.

**எதிர்ப்புகள்**

தோழர் சாந்தியின் சகோதரர்கள் எனது நெருங்கிய நண்பர்கள். குறிப்பாக, சாந்தியின் மூத்த சகோதரர் இராமு அண்ணன் என்னிடம் மிகுந்த மதிப்போடும் அன்போடும் பழகுவார். குடும்பத்து ஆலோசனைகள் எல்லாம் என்னோடு கலந்து கொள்வார். ஆனால், சாந்தியை நான் பெண் கேட்டபோது 'சாதிமாறி' மணம் முடிக்கமுடியாது என்று எதிர்ப்புக் காட்டினார். அதேபோல என்னுடைய பெற்றோருக்கும் சாந்தியின் மீது மிகுந்த மதிப்பும் அன்பும் இருந்தது. நானும் சாந்தியும் மணம்முடித்துக் கொள்வதில் விருப்பமும் இருந்தது. ஆனால், எனதுபெற்றோரின் ஓர்ஓரத்தில் இருந்த 'ஜாதகம்' எனும் மூடநம்பிக்கையால் எங்கள் திருமணத்தை அவர்களும் உடனே ஏற்கத்தயங்கினர். ஆக, ஜாதியும், ஜாதகமும் தவிர எங்கள் திருமணத் திற்கு வேறு எதிர்ப்புகள் ஏதுமில்லை என்றே கருதுகிறேன்.

**திருமணம் எங்கு? எப்படி?**

எங்கள் திருமணம் கா.க.புதூர் கிராமத்தில் எங்கள் வீட்டுவாசலில் கட்சிமாநாடுபோல் நடைபெற்றது. த.பெ.தி.க பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் அவர்கள் தலைமையில், தோழர்கள் வெ.ஆறுச்சாமி, ஆழியாறு நாச்சிமுத்து. பொள்ளாச்சி மனோகரன், கருமலையப்பன் ஆகியோர் முன்னிலையில், ஓர் இயக்கநிகழ்வாகவே நடைபெற்றது. அன்றைய கோவை மாவட்ட த.பெ.தி.க தோழர்கள் பெருமளவில் பங்கேற்றிருந்தனர்.

நானும் தோழர் சாந்தியும் சேர்ந்து வாழ்வது இயக்கப்பணிகளுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்கிற எண்ணத்தில் எங்கள் திருமணத்தை முன்னின்று நடத்தியவர் களுள் ஒருவர் அன்றைய தி.மு.கழக ஒன்றியச் செயலாளராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினரா கவும் இருந்த சாந்திதேவி அவர்கள் மணவிழாவில் முன்னிலை வகித்து வாழ்த்துரை நிகழ்த்தியவர். அண்ணா தி.மு.க வின் சார்பில் ஊராட்சி

ஒன்றியக்குழுத் தலைவராக இருந்த சாந்திபாலு அவர்கள். இருவருமே காதல்மணம் புரிந்தவர்கள்.

அதேபோல பொள்ளாச்சி நகரில் முதல் சுயமரியாதைத்திருமணம் செய்துகொண்ட கழகத் தோழர் வே.வெள்ளிங்கிரி, திருமணம் என்கிற சடங்கையே தூக்கி எறிந்துவிட்டு, இயல்பான சேர்ந்து வாழ்தலில் வாழ்ந்து, பெரியாரியலை அழுத்தமாகப் பின்பற்றும், எனது மூத்த அண்ணன் சி. விசயராகவன் ஆகியோர் எனது மணவிழாவில் வாழ்த்துரைத்தார்கள். பலரும் சொல்வார்கள் செயலில் மாறுபடுவார்கள். ஆனால், சத்தமே இல்லாமல் தன்னுடைய சொந்தவாழ்வைப் பெரியாரியலோடு இணைத்துக் கொண்ட தோழன் தட்சு மற்றும் கா.க.புதூர் தோழர்களின் பெரும் துணையோடு எங்கள் வாழ்க்கைத்துணை ஏற்புவிழா நடைப்பெற்றது. ஒருவகையில் பெரியாரியல் குடும்பவிழாவாகவே எங்கள் திருமணம் நடைப் பெற்றது.

**ஜாதி ஒழியுமா ?**

ஜாதிஒழியுமா? ஒழிந்துபோய்விடுமா? என்றால் இதனால் மட்டும் அது நடந்துவிடாது. முதற்கட்டமாக ஜாதிமறுப்புத் திருமணங்களால் ஜாதி புறக்கணிக்கப்படுகிறது. அல்லது ஜாதி உறவுகளால் இந்த ஜாதிமறுப்பாளர்கள் புறக் கணிக்கப்படுவார்கள். எப்படியானாலும் அது ஜாதிக்கு எதிரான நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன்.

ஆனால், ஜாதிமறுப்புத் திருமணங்களை முன்னின்று நடத்துகிற ஆதரிக்கிற நம்போன்ற இயக்கங்களின் கடைமையாக நான் இரண்டு கருத்துக்களை முன்வைக்கிறேன்.

1. ஜாதிமறுப்புஇணையர்கள் இயன்றளவு சுயசாதி வட்டத்திற்குள் சங்கமித்துவிடாமல் நம்மைப் போன்ற இயக்கவாதிகளாக அல்லது இயக்க ஆதரவாளர் களாகத் தொடர்ந்து தொடர்பில் வைத்திருப்பது.

2. கட்டாயம் அவர்களது வாரிசுகளை ‘சாதியற்றோர்’ என்ற பட்டியலில் அடையாளப்படுத்தச் செய்வது.

இயக்கங்களிடம் ஆதரவு கேட்டு வருகிற காதல் இணையர்களிடம் இந்த இரண்டையும் முன் நிபந்தனையாகக்கூட வைத்து அவர்களது திருமணத்தை நடத்தி வைக்கலாம். இதை ஏற்காதவர் களாயிருந்தாலும் நாம் ஆதரிக்கிறோம் என்பது வேறு. இயன்றளவு இவற்றை ஏற்கச்செய்யலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

மற்றபடி பகுத்தறிவு, சுயமரியாதைப் பரப்பு ரைகள்,சாதிக்கெதிரான தொடர்பயணங்கள் மூலமாகவே காலப்போக்கில் ஜாதியை ஒழிக்க முடியும். ஜாதிக்கு ஆதாரமான சடங்குகள், சம்பிர தாயங்கள், பழக்கவழக்கங்கள், கடவுள், மதம், மதச் சார்பு அதிகாரமையம், அரசு என அனைத்தையும் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஜாதிமட்டும் ஒழியவேண்டும் என்று கருதுவதும் ஒருவகையில் மூடநம்பிக்கையே!

இதிலே, பெரியாரிஸ்ட்டுகள் என்போரது பணி முக்கியமானது. குறைந்தபட்சமாக தங்கள் குடும்பத்திலாவது, சுயஜாதித் திருமணங்களை நடத்த அனுமதிக்காமல் தங்கள் சொந்த வாழ் விலாவது ஜாதி, சடங்கு மறுப்பாளர்களாக வெளிப் படையான வாழ்வை வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதன் மூலம் (பெரியார் காலத்தைப்போல) ஜாதிஒழிப்புக்கான முயற்சி களுக்கு உரிய மதிப்பைக் கூட்டமுடியும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இவையெல்லாம் ஜாதிஒழிப்புக்கு வாய்ப்புள்ள முயற்சிகள் என்பது என்கருத்து.

**சுயசாதித் திருமணங்கள்**

அறிவியல் பூர்வமாக சுயசாதி திருமணங்கள் தவறு, கூடாது என்கிற செய்திகள் ஒருபுறம் சொல்லப்படுகின்றன. நீங்கள் (காட்டாறு)கூட அது குறித்த அறிவியல் விளக்கங்களுடன் சிறுவெளி யீட்டை வெளியிட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் கருதுவது தந்தை பெரியார் அவர்கள் சொன்னதன் அடிப்படையில்.

மனித சமுதாயத்தைப் பிரித்து, பிளவுப்படுத்தி, ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கிற ஒரு காட்டு மிராண்டித்தனம்தான் சாதி என்பது. அதுமட்டு மல்ல, உழைக்காமல் ஒருவன் உழைப்போரை மேலாண்மை செய்வதற்கான ஏற்பாடுகளையும் அதற்கான பாதுகாப்பையும் வழங்குவதே சாதி அமைப்பு.

இந்தக் கொடுமையான சாதிஅமைப்பு காலங் காலமாக எதன் பாதுகாப்பில் உயிர்ப்போடிருக் கிறது என்றால், கடவுள், மதம் என்கிற ஏற்பாடு களையும் தாண்டி, சாதிக்கான ஆதாரங்களான சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்களில் தான் சாதி உயிர்த்துடிப்போடு இருந்துவருகிறது. ஆக, இவை அனைத்தையும் சுயசாதித் திருமணங்கள் பாதுகாத்து உறுதிப்படுத்துகின்றன.

பி.இ பொறியியல் படித்தவன், மருத்துவம் படித்தவன்கூட ஜாதகம் பார்ப்பதும், காரணமே இல்லாத மூடச்சடங்குகளில் கூச்சமின்றி மூழ்கி எழுவதும், சம்பிரதாயங்கள் என்று அறிவுக்குப் பொருந்தாதவற்றைச் செய்வதும் சுயசாதித் திருமணங்களில் மட்டும்தான் மிகுந்து நிற்கிறது. அந்த அடிப்படையில் இவற்றை ஒரு சமூகத்தீங்காக, அறிவியலுக்கும், மனித நேயத்திற்கும் எதிரான ஒரு நோயாகக் கருதுகிறோம்.

சாதிஒழிப்பு என்கிற சமூக மருத்துவத்தில் சுயசாதித் திருமணம் என்பது ஒருவகை நோய்க் கிருமி என்றும் சாதிமறுப்புத்திருமணம் என்பது ஒருவகை ஆண்டிபயாட்டிக் என்றும் நான் நம்புகிறேன்.

**மாற்று தேசியஇனத்தில்...**

(பலமான சிரிப்பு) நாம் மனிதர் உரிமைக் காகத்தான் போராடுகிறோம். அதே நேரத்தில் இயற்கைச் சூழலுக்காகவும் கூடப்போராடுகிறோம். அதுபோல தமிழர் என்பதால் மறுக்கப்படும்

நியாயங்களுக்காகவும் போராட வேண்டிய நிலை தமிழ்மண்ணில் பிறந்து, தமிழ்மண்ணில் வாழ்வ தனால் உண்டாகியிருக்கிறது அவ்வளவே.

திருமணம் என்பது வயது வந்த ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்காகச் செய்து கொள்கிற ஓர் ஒப்பந்தம் என்று பெரியார் சொல்லுவார். இதில், ஜாதிக்கும், ஜாதகத்திற்கும், சடங்கு களுக்கும், சம்பிரதாயங்களுக்கும், பார்ப்பான்களுக்கும் என்னவேலை? என்றுதான் நாம் கேட்கிறோம். இதேகேள்விதான் இந்தக் கேள்விக்கான பதிலும்

> **"நாம் நாமாகப் பிறக்கவில்லை. எனவே நமக்காக மட்டுமே வாழக்கூடாது" என்கிற பெரியாரின் கொள்கைப்படி...........**

**கேரளா மக்களிடம் ஆணவப்படுகொலைகள்...**

இதற்கான பதிலை நான் சொல்வதைக் காட்டிலும் தோழர் சாந்தி அவர்கள் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும்.

கேரளாவில் மலையாள மக்களிடமும் ஜாதி இருக்கிறது. ஜாதிக்கு ஆதரவான அனைத்தையும் நம்மை விடவும் கூடுதலாகவே பாதுகாக்கிறார்கள். ஒரு சின்னவேறுபாடு மலையாளிகளின் மேட்டுக் குடிகளில் சாதிக்கலப்புமணங்கள் நடை பெறுவ தில்லை. ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகங்களில் ஜாதிக்கலப்புமணங்கள் அதிகம். பெரிய எதிர்ப்பு இருப்பதில்லை. மற்றபடி, சாதி ஆணவம் யாரிடமும் பெரிதாக இருப்பதில்லை. எனவே, ஆணவப் படுகொலைகளுக்கான வாய்ப்பும் சூழலும் அங்கு எழவில்லை என்றே கருதுகிறேன்.

**தோழர் சாந்தி**

எங்கோ கேரள மண்ணிலிருந்து மைசூர் தேயிலைத் தோட்டங்களுக்கு வாழ்வுதேடிப்போன செல்லம்மாள்-மாணிக்கம் இணையரின் கடைசி மகளாகப் பிறந்து பின்தமிழ்நாட்டின் பொள்ளாச்சி நகரில் குடியேறினோம்.

தந்தையின் மறைவுக்குப்பின் அண்ணன்களின் பராமரிப்பில் நானும் எனது தாயாரும் இருந்தோம். அப்போது தோழர் காசு.நாகராசன் அறிமுகமாகி எங்கள் நட்பு தோழமையாகி இன்று கொள்கைப் படியான ஒரு வாழ்வில் நாங்கள் இணைந்து பயணிக்கிறோம்.

பள்ளிப்படிப்பு மட்டுமே படித்திருந்த நிலையில் குழந்தைக்கல்வியின் மீது நான் கொண்ட ஈடுபாடு இன்றைக்குக் கல்லூரிக்கல்வி படிக்கிற பிள்ளைகள்வரை என்னோடு படிப்பு குறித்துக் கலந்துரையாடும் அளவுக்கு, கற்கும் அளவு என்னைத் தயார்படுத்தியது.

1999 ல் தொடங்கி 2015 முடிய இந்தச் சின்னஞ் சிறிய கிராமத்தில் சுமார் 200 பட்டதாரிகளை உருவாக்கியதில் பெரும்பங்காற்றியிருக்கும் பூஞ்சோலை கல்விமய்யத்தின் களப்பணியாளராகப் பணியாற்றி வருகிறேன். எங்கள் பிள்ளைகள் பலர் படித்துவிட்டு வேலை தேடுகிறார்கள். இப்போது இவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கு வது குறித்தும் சிந்தித்து வருகிறோம்.

பூஞ்சோலை கல்விமய்யம் வழியாக ஓர் அழகிய பெரியாரியல் சமூகத்தைப் படைக்கும் பணி களைச் செய்துவருகிறோம். அதன் முயற்சிகளுக்கு என்னால் இயன்ற பங்களிப்பை வழங்கிவருகிறேன்.

**எதிர்ப்பு - ஆதரவு**

தோழர் காசு.நாகராசன் மீது என் குடும்பத் திற்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் அன்பும் உண்டு. அதற்குக் காரணம் அவரது கொள்கை, குணம், சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்த அவரது உண்மை. அவரோடு நான் இணைந்து வாழ்வது சிறப்பாக இருக்கும் என்கிற நம்பிக்கைகூட என் வீட்டாருக்கு இருந்தது. ஆனால், ஜாதிமட்டுமே அவர்களுக்குத் தடையாக இருந்தது.

ஜாதிமாறிமணம்முடித்தால் உறவுக்காரர்கள் ஏளனம் பேசுவார்களோ, அதனால் குடும்பமானம் கவுரவம் பாதிக்கப்படுமோஎன்கிற அச்சம் காரண மாக எங்கள் திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் கள்.எனது அண்ணனின் நண்பர்கள், தொழில் கூட்டாளிகள், குடும்ப நண்பர்கள் பலரும் எங்கள் மணவிழாவிற்கு வந்திருந்தனர். என்குடும்பத்தினர் யாரும் வராதது எனக்குப் பெரிய வலிதான் என்றாலும், நண்பர்களின் வருகை ஆறுதலாக இருந்தது.

நான் வீட்டாரின் விருப்பத்திற்கு எதிராகச் சாதிமாறி மணம் முடித்துக்கொண்டதால் எனது தாயாரின் முகத்தைக்கூட என்னால் கடைசிவரை பார்க்க முடியவில்லை. எனது வீட்டைவிட்டு நான் கடைசியாக வரும்வரை, எனதுதாயாரை நான்தான் பாராமரித்து வந்தேன். கான்சர் நோயாளியான எனது தாயாருக்கு எனது உதவியும் ஆதரவும் தேவைப்பட்டது. மரணவாயிலில் என்னைக் காண வேண்டும் என என் தாயார் விரும்பியபோதும், அவரைப் பார்க்க நான் முயன்றபோதும் இந்தச்சாதி போலி கவுரவம் எங்களை அனுமதிக்கவில்லை.

மகளின் முகத்தைக் காணமுடியவில்லையே என்கிற ஏக்கத்தில் எனது தாயின் மரணமும், கடைசியாக மரணவாயிலில் நின்ற அம்மாவைப் பார்த்து அவருக்கு அருகிலிருந்து ஏதும் செய்ய முடியவில்லையே என்கிற துயரம், என்பது எந்தக் காலத்திலும் சமன்செய்யமுடியாத இழப்பின் அடையாளங்கள்.

ஆனால், எதிர்ப்புகளையும், இழப்புகளையும், வலிகளையும் தாங்கிய எனது ஜாதிமறுப்புத் திருமணம் என்பது ஒரு சமூகமாற்றத்திற்கானது என்கிறபோது துயரங்களைக் கடந்த ஓர் ஆறுதல் கிடைக்கவே செய்கிறது. சேதாரம் இல்லாமல் நகையேது? இழப்புகள் இல்லாமல் விடுதலையேது?

**பெரியார் கொள்கை ஈடுபாடு**

தோழர் கா.சு. நாகராசனின் நட்புக்குப் பிறகே எனக்குப் பெரியாரும், சுயமரியாதையும், பெண் விடுதலையும் அறிமுகமானார்கள். அரிதாரம்

இல்லாத எதார்த்தமான புன்னகையின் வடிவமாகத் தான்; மகிழ்ச்சியின் அச்சாரமாகத்தான் பெரியாரி யலை நான் பார்க்கிறேன். பெரியார் காண விரும்பிய சமத்துவ சமூகம்தான் உண்மையில் வாழ்வின் அர்த்தங்களாக இருக்கும் என்பது என் எண்ணம். அந்த இலக்கில் நாங்கள் பயணித்துக் கொண்டே மற்றவர்களையும் பயணிக்கச்செய்கிறோம்.

**நாகராசனை விரும்பக்காரணம்**

"நாம் நாமாகப் பிறக்கவில்லை. எனவே நமக்காக மட்டுமே வாழக்கூடாது" என்கிற பெரியாரின் கொள்கைப்படி தான்பிறந்த சமுதாயத்திற்குத் தன்வாழ்நாளில் ஏதாவது ஒரு பணியைச் செய்ய வேண்டுமே என்கிற எதிர் பார்ப்பில் தோழர் காசு. நாகராசன் செயல்படுகிறார் என்பதை உணர்ந்து என்னால் இயன்றளவு அவரது முயற்சிகளுக்குப் பங்காற்றினேன். உளப்பூர்வமான எனது பணிகள் திருமணம் எனும் காலஓட்டத்தில் மடைமாற வேண்டாம். அது தொடர்ந்து இந்தச் சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்கிற உண்மையான அன்போடும் அக்கறையோடும் எனது கருத்தைக் கேட்ட தோழர் நாகராசனிடம் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. அவரது பணிகளில் என்னைப் பெருமிதத்தோடு இணைத்துக் கொள்ளச் சம்மதித்தேன்.

**நாகராசனின் பணிகளில் பங்களிப்பு**

"எல்லாச் சீர்திருத்தங்களையும் உன் வீட்டி லிருந்தே தொடங்கு" என்று சொல்வார்களே அப்படி தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளைத் தன் வீட்டிலிருந்தே நடைமுறைப்படுத்திய தோழர் நாகராசன் தன் குடும்பத்தினரைப் பெரியாரியல் வாதிகளாய் மாற்றிய பிறகு ஊருக்குள் இளைஞர் கூட்டத்தை இயக்கம் நோக்கித் திருப்பி, தன் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடின்றி வாழும் அவரது முயற்சிகளின் விளைவாய், இன்றைக்கு கா.க.புதூர் கிராமத்தில் எவ்வளவோ மாற்றங்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்கள் பெரியாரைத் தலைவராகக் கொண்டாடும் கிராமமாக இன்றைக்கு கா.க.புதூர் மாறியிருக்கிறது.

இந்தச் சமூகத்தின் பெரும்கேடான சாதிக்கு எதிராக தோழர் நாகராசனும் தோழர்களும் தொடுத் திருக்கிற பெரியாரியல் போராட்டத்தின் வேகம் சாதி ஆதிக்கவாதிகளையும் மதவெறியர்களையும் கலக்கமடையச் செய்தது. அதன் விளைவே சாதி-மதவெறியர்களின் கூட்டு வன்முறை எங்கள் வீட்டில் நிகழ்த்தப்பட்டது. அப்பட்டமான அந்தச் சாதி - மத வெறி வன்முறையை, ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களும் அணிதிரண்டு எதிர்த்து நின்றதே நாகராசனின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம். இந்தச் சமூக மாற்றத்திற்கான தோழர் நாகராசனின் முயற்சிகளுக்கான நாற்றங்கால்களை வளர்த் தெடுக்கும் பணியையே நான் மேற்கொண்டு வருகிறேன்.

## 'அம்பேத்கர் - பெரியார் - காரல்மார்க்ஸ் பண்பாட்டு இயக்கத்தின்' தலைவர், மருத்துவர் நா.ஜெயராமன் அவர்கள் காட்டாறு இதழுக்கு அனுப்பிய விமர்சன மடல்:

வணக்கம். சில மாதங்களாகத்தான் நான் காட்டாறு இதழின் வாசகராக உள்ளேன். அரிய அருமையான தகவல்களைக் கொண்டுவந்து சேர்க்கிறது. ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தரமற்ற சஞ்சிகைளும், தரமற்ற வாசகர்களும் விரிந்திருகின்ற இந்தச்சூழலில் நல்லசெய்திகளை, நல்ல வாகசர்களை நோக்கித் திருப்புவது சிறப்புமிகு பணி.

அந்த வகையில் இதழ்கள் வளமான, சமூகப் பிணிகளைச் சீர்செய்யகின்றது மார்ச் 17 இதழலில் 'நந்தினியைத் தண்டித்த சமுதாய மனுநிலை' என்ற கட்டுரையில் பெண்விடுதலை பேசியவர்கள் கூடாரம் மாறியதும் "மனு"வாகவே அவதரிப்பதன் சூழல் விளக்கப்பட்டிருக்கிறது.

பெண்விடுதலைக்குப் பெண்கள்தான் முதல்எதிரியாக இருக்கிறர்கள் என்பதை அம்பலப் படுத்திஇருக்கிறார் தாரபுரம்பூங்கொடி. தரமான பதிவு. அதுபோல கண்ணகியைப் பின்பற்ற வேண்டாம். கைம்பெண், ஆடைக்கட்டுப்பாடா?, மனக்கட்டுப்பாடா?, கற்பு என்றால் என்ன? எல்லாமே மிக அருமை.

மே மாத இதழான, குலதெய்வ - நாட்டார் தெய்வ எதிர்ப்புஇதழ் இன்றைய இந்துத்துவா முகமூடியை வலிய மாட்டிக்கொண்டு, எது திசை?, எது திக்கு? எனத் தெரியாமல் அலையும் மக்களுக்கு, குறிப்பாக தலித்துகளுக்காக மிகமிகத் தேவையான இதழ்.

தன்னை இந்துஎன்றும், நமது கலாச்சாரம் , நமது பண்பாடு என்றெல்லாம் பெரிய பெரிய வார்த்தைகளுக்குள் மூழ்கி - சாதி முத்துகளை அள்ளிவந்து குவிப்பவர் களுக்குத் தேவையான சிறப்பு இதழ் இது.

குலதெய்வவழிபாடு, சிறுதெய்வவழிபாடு எல்லாம் இந்துமதத்தின் தொங்குசதைதான். இதற்குள் சாதியைத் தவிர வேறு எந்தக்கலாச்சரமும் இல்லை என்பதை விவரித்திருக்கின்றது. ஒவ்வொரு கட்டுரையும் காலத்தின் தேவை. தமிழன் என்று கூறிக்கொள்ளும் ஒவ்வொருவரும் தெளிவாக வாசிக்கவேண்டிய இதழ் இது.

இத்துடன் 'குலதெய்வ வழிபாடு தலித்தியத்தை எதிரொலிக்கவில்லை' என்ற எனது கருத்தைத் தாங்கிய - தலித்முரசில் வெளிவந்த எனது நேர்முகம் சிறுவெளியீடாக வந்ததையும் இணைத்துள்ளேன். ஆசிரியரின் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

என்றும் தங்கள் உறவில் மகிழும்
நா.ஜெயராமன், 8.06.2017

ஆர்.எஸ்.பிரபு

# பாரம்பரிய விதைத் திரு(ட்டு) விழாக்கள்



காலங்காலமாக விவசாயிகளால் பயிரிடப்படும் உள்ளூர் இரகங்களை land Races என்பார்கள். ஒருகாலத்தில் வர்த்தக ரீதியில் பயிரிடப்பட்டு இன்று புழக்கத்தில் இல்லாத இரகங்கள் Heirloom எனப்படும். விவசாயம் செய்யாமல் ஆங்காங்கே தாந்தோன்றியாக வளர்ந்துகொண்டிருக்கும் இரகங்கள் Wild varieties எனப்படும். ஒரே தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த மரபியல் ரீதியாக நெருங்கிய தொடர்புடைய வைகளை Wild Relatives என்பார்கள். இவை யனைத்தும் சேர்ந்ததே Germplasm எனப்படும்.

ஜெர்ம்பிளாசம் என்பதும் நாட்டின் ஒரு சொத்து. Biodiversity என்பது பல்லாயிரம் தாவர, விலங்கினங்கள் மட்டுமல்ல; ஒரே தாவரத்தின் / விலங்கின் பலநூறு வகைகளும் சேர்ந்தது. இவற்றைச் சேகரித்து, வகைப்படுத்தி, பாதுகாக்க அந்தந்த மாநில விவசாயப் பல்கலைக்கழங்கள், National Bureau of Plant Genetic Resources, Botanical Survey of India, ICAR இன் கீழ் வரும் ஒவ்வொரு பயிருக்கான ஆராய்ச்சி மையங்கள் போன்றவை செயல்படுகின்றன.

ஜெர்ம்பிளாசம் பாதுகாப்பை அந்தந்த அமைப்புகள் தங்களின் மிக முக்கிய சொத்தாகக் கருதிப் பாதுகாப்பது வழக்கம். தனியார் விதை நிறுவனங்கள் வர்த்தக நோக்கில் ஜெர்ம் பிளாசத்தைப் பாதுகாத்து வைத்திருக்கின்றன. விதைத் துறையில் ஒரு நிறுவனம் இன்னொன்றைக் கையகப்படுத்துவதே இந்த ஜெர்ம்பிளாசத்தைக் கைப்பற்றுவதற்காகத்தான்.

புதிய இரகங்களை உருவாக்க இந்த ஜெர்ம் பிளாசத்திலிருந்து பிரித்து எடுக்கப்படும் Parent lines மிக முக்கியமானது. பூச்சி, நோய் தாக்காத , புதிய பண்புக்கூறுகளை உருவாக்க உலகளவில் போட்டி போட்டுக்கொண்டு ஆராய்ச்சி செய் கிறார்கள்.

உதாரணமாக பருத்திப்பஞ்சு சிவப்பு, பச்சை என வண்ண வண்ணமாக வந்தால் சாயப் பட்டறை களே இல்லாமல் நேரடியாக நூல் நூற்க இயலு மல்லவா? அதற்கு Parent Material இல் உள்ள Diversity மிக முக்கியம். பலவகையான Combination மூலம் புதிய கலப்பினங்களை உண்டாக்கக்கூடிய, நன்றாக தொழில் தெரிந்த Breeder களுக்கு சந்தையில் இன்று ஆண்டு சம்பளம் 20 இலட்சத்தில் ஆரம்பிக்கிறது எனும்போது அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துக் கொள்ளலாம்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு சர்வதேச சட்டங்களை மதித்து நடக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் அரசுக்கு முறைப்படி விண்ணப்பித்து, ஜெர்ம்பிளாசத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அந்தக் கடமை உள்நாட்டு நிறுவனங்களுக்குப் பெரிய அளவில் கிடையாது என்பதால் புகுந்து விளையாடலாம்.

விவசாயிகள் தங்களுடைய விதைகளைச் சேமித்து வைப்பதை, அக்கம்பக்கத்தில் உள்ளவர் களிடம் இலவசமாகப் பரிமாறிக்கொள்வதை அவர்களது அடிப்படை உரிமையாகக் கருதி, சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் வணிகரீதியில் விற்கும் போது விதைச்சட்டம் மற்றும் இதர சட்ட திட்டங் களுக்குக் கட்டுப்பட்டாக வேண்டும்.

உலகளவில் விவசாயிகளின் உரிமைகளை மதிக்கும் நாடுகளில் இந்தியா மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. தாவர, விலங்கினங்களின் IP Rights குறித்த நிபுணத்துவம் பெற்ற சட்ட வல்லுநர்கள் எல்லா தனியார் நிறுவனங்களிலும் இருக்கிறார்கள். ஒரு புதிய இரகத்தை அறிமுகப்படுத்தும்போது அதை உண்டாக்கிய பயிர்ப்பெருக்கவியல் விஞ்ஞானி (Breeder), நிறுவனத்தின் தலைமை Legal Counsel மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மூவரும் கையொப்பமிட்டு, அரசுக்கு விண்ணப்பிப்பார்கள்.

அப்போது புதிய இரகத்தின் Pedigree, DUS Characters எனப் பல ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஏதாவது ஒரு Parent -ஆனது Public Domain லிருந்து திருடப்பட்டிருந்தாலும், அப்போதைக்கு இல்லாவிட்டாலும் சில மாதங்களிலேயே கண்டுப் பிடித்துவிடுவார்கள். ஏனென்றால் அரசாங்கத்திலும் பழம் தின்று கொட்டை போட்ட பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை முறையாக பயன்படுத்திக்கொள்ளத்தக்க தலைமை பெரும் பாலும் வாய்ப்பதில்லை என்பது வேறுகதை.

பொதுவாக வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களை நல்ல ஆய்வகங்களில் கண்ணாடித் தடுப்புக்கு வெளியே நிறுத்தியே காட்டி அனுப்பிவிடுவார்கள். ஓர் இலையைக் கிள்ளி பாக்கெட்டில் போட்டுக் கொண்டு ஓட்டலுக்கு வந்து ஐஸ் நிரப்பி ஃபிளாஸ்க்கில் வைத்து எடுத்து வந்து திசுவளர்ப்பு மூலம் Regenerate செய்து, அதே இரகத்தை உண்டாக்கிய ஆட்களின் கதைகளைக் கேட்டுதான் நாங்கள் படித்தோம்.

பி. டி. பருத்தி அதிகாரப்பூர்வமாக பயிரிட அனுமதிக்கும் முன்னரே அமெரிக்காவிலிந்து பத்து இருபது விதைகளை கேஷுவலாக லக்கேஜ்களுடன் எடுத்துவந்து உள்ளூர் இரகங்களுடன் கலப்பினம் உண்டாக்கி குஜராத்திகள் பயிரிட்டிருந்தார்கள்.

**விதைத் திருட்டுக்குத் துணைபோகும் இயற்கை ஆர்வலர்கள்**

விவசாயி என்ற போர்வையில் பாரம்பரிய விதைச் சேகரிப்பாளர்கள் என சொல்லிக்கொண்டு தொழில்முறையில் அதில் ஈடுபடும் சிலர், ஒரு சில அரிய உள்ளூர் இரகங்களை Farmer to Farmer Free Exchange of Seeds என்றபெயரில் சட்டத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தி ‘கைமாற்றி’ விடுவது பரவலாக நடக்கும் ஒன்று.

புரூஃப் இருக்கா என்று கேட்டு யாரும் கேட்டை ஆட்டவேண்டாம். இதெல்லாம் அந்தந்த டிபார்ட்மெண்ட் வாட்ச்மேன் வரை தெரிந்த விசயம். (உண்மையான ஒரு சொந்த ஆர்வத்தில் புதிய புதிய இரகங்களைச் சேகரித்து வைக்கும் விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள்; அதனால் பொத்தாம் பொதுவாக சொல்வதாக கருதக் கூடாது).

கடந்த சில நாட்களாக, சென்னையில் **மரபு விதைத் திருவிழா** ஒன்று நடந்ததாகவும் 150-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் 3000-க்கும் அதிகமான பாரம்பரிய இரகங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்ததாகவும் நாளேடுகள் தெரிவிக்கின்றன. இது சண்டிகர், புதுதில்லி, ஐதராபாத் நகர்களில் நடந்த விதைத் திருவிழாவின் நீட்சி என தெரிய வருகிறது.

அதை நடத்திய ASHA (Alliance for Sustainable and Holistic Agriculture) என்ற அமைப்பு எதிலுமே பதிவு செய்யப்படாத ஒன்று. தொண்டு நிறுவனம், டிரஸ்ட், சொசைட்டி என சட்டத்தின்முன் நிற்க எந்த வடிவமும் இல்லாமல் ஆனால் பொதுமக்களின் நன்கொடையில் இயங்குவதாகச் சொல்லிக் கொள்கிறது. எந்தவொரு சட்டப்பூர்வ அனுமதியும் பெறாத ஒரு நிழல் அமைப்பு, பல மாநிலங்களிலுள்ள உண்மையான விதைச் சேகரிப்பு செய்யும் விவசாயிகளை இந்தப் போலி இயற்கை ஆர்வலர் ஆட்கள் மூலமாக மூளைச்சலவை செய்து அவர்களிடமுள்ள விதைகளைக் காட்சிப்பொருளாக்கச் செய்திருக்கிறது.

ஒரே வரியில் சொன்னால் *Its a vulnerable exposure of country's genetic resources under one roof by shadow organizations.* அங்கு வைக்கப்பட்டிருக்கும் சில முக்கியமான இரகங்களில் பத்து இருபது விதைகளை எடுத்து பாக்கெட்டுக்குள் போட்டு வருவது பெரிய காரியமன்று. பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் ஒழிக, விவசாயிகள் ஒற்றுமை ஓங்குக என்ற கோஷத்துடன் இந்தப் பாரம்பரிய விதைத் திருவிழாக்கள் யாருக்காக நடக்கின்றன என்பதை இனியும் விளக்க வேண்டியிருக்காது.

இத்தகைய பதிவு செய்யப்படாத போலி இயற்கை விவசாய அமைப்புகள் நடத்தும் விழாக்களில் அரசு வேளாண்மைத்துறை அதிகாரிகள் விருந்தினராகச் சென்று மேடைகளில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது Code of Conduct குறித்தும் Conflict of Interest குறித்தும் வேலையில் சேரும்போது எடுக்கப்பட்ட வகுப்புகளை புரபேஷனரி பீரியட் முடியும்போதே மறந்து விட்டார்களோ என்ற ஐயம் எழுகிறது. பதிவு செய்யப்படாத நிழல் உலக அமைப்புகளை நாட்டின் சொத்தான Genetic Diversity யைக் காட்சிப்படுத்த அனுமதி எப்படி கிடைத்தது?

குடியரசு தினவிழாவில் படைக்கலன்களை மக்கள் காட்சிக்கு வைப்பார்கள். அதற்காக எல்லா போர்க்கருவிகளும் அங்கு இருக்குமா என்றால் நிச்சயமாக இருக்காது. எதுவரை பொதுமக்களுக்குக் காட்டலாம் என்ற வரையரையை அந்தந்தத் துறைஅதிகாரிகள் முடிவு செய்வார்கள். அதிலும் குறிப்பிட்ட ஆயுதங்களைச் சில அதிகாரிகள் மட்டுமே அணுகும்படிதான் இருக்கும். அதேமாதிரி தான் விவசாயக் கண்காட்சிகளில் பொதுமக்களுக்கு எந்தெந்த இரகங்களைக் காட்சிக்கு வைக்க வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும், எதை மிக இரகசியமாகக் குறியீடுகள் மூலம் பாதுகாக்க வேண்டுமென்பதை அந்தந்தத் துறை அதிகாரிகள் முடிவு செய்து வைத்திருப்பார்கள்.

**நம்மாழ்வாரியம்**

முறையாக விவசாயம் செய்பவர்களுக்கு எது நல்லது? எது கெட்டது? என்ற அனுபவப் புரிதல் இருக்கும். உதாரணமாக, எல்லாச் சுண்டைக் காய்களும் உண்ணத் தகுந்தவை அல்ல. சில இரகங்கள் கடுமையான ஒவ்வாமையை உண்டாக்கும். எல்லாக் காளான்களும் உண்ணத்தக்கவை அல்ல. சில காளான்களைச் சாப்பிட்டால் உடனடி மரணம் நிச்சயம். இன்று உணவுக்காக விவசாயம் செய்யப்படும் அத்தனை வகைப் பயிர்களும் உடலுக்குத் தீங்கு விளைவிக்காதவை என்று பலமுறை அனுபவத்தால், ஆய்வுகளால் உறுதிப்படுத்தப்பட்டவை.

தாத்தா விவசாயம் செய்தார், அப்பா பார்ட்டைமாக விவசாயம் செய்தார் என்பதைத் தாண்டி விவசாயத்துக்கு எந்தத் தொடர்புமில்லாதவர்கள் வார இறுதி நாட்களில் பேக்பேக்கை மாட்டிக் கொண்டு எங்காவது மலையடிவாரத்தில் வளரும் செடிகளை, பாரம்பரிய மரபு இரகங்கள் என எடுத்து வந்து ஊருக்குள் நட்டுவைத்து, ஆர்கானிக் இயற்கை காய்கறி அங்காடிகளில் விற்று அதன்மூலம் பல

ஒவ்வாமை / நரம்பு மண்டலம் சார்ந்த நோய்களை உண்டாக்கப்போவது உறுதி.

அதற்கும் இயற்கை மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்து நோய் முற்றியபின் அலோபதிக்கு சென்று ஆர்கானிக் ஃபுட் சாப்பிடும் எனக்கு வேண்டுமென்றே மருத்துவமனைகள் அதிக பில் போட்டு ஏமாற்றுகின்றன. மருந்து வேலை செய்யவில்லை என மருத்துவர்களை அடிக்கப் போவதும் நடக்கத்தான் போகிறது.

அனுபவமிக்க வனவியலாளர்களுடன் காட்டுக்குள் செல்லும்போது அவர்கள் தரும் முதல் அறிவுரை எந்தப் பூக்களையும் முகர்ந்து பார்க்கக் கூடாது. இரண்டாவது அறிவுரை என்னவென்று தெரியாத பழங்களை உண்ணக்கூடாது என்பது தான். மருத்துவர்கள் தெரிந்த நோய்களுக்குத்தான் மருத்துவம் செய்வார்கள். ஏதாவது காட்டுக்குள் இருக்கும் விஷச்செடியை பாரம்பரிய இரகம் என்று கொண்டுவந்து அரைத்துக் குடித்துவிட்டு வந்தால் என்ன செய்வார்கள்.

இயற்கை விவசாயம் என்ற பெயரில் நம்மாழ் வாரிய மூடர்கள் கூட்டம் அடிக்கடி பரிந்துரைப்பது மீன் கரைசல் அல்லது மீன் அமில கரைசல். அதாவது மீன் மார்க்கெட்டில் கழிவாகப் போடுவதை அள்ளி வந்து கொஞ்சம் வெல்லத்தைக் கலந்து காற்று புகாமல் ஓரிரு மாதம் மூடிவைத்து பின்னர் எடுத்து தண்ணீரில் கலக்கி பயிரின்மீது தெளிப்பது.

மீனின் தசைகளிலுள்ள நைட்ரஜன் பயிர் களுக்கு கிடைக்கும் என்பது இதன் சாராம்சம். காற்றுபுகாத இந்த Anaerobic Condition-லும் சில உயிர்க் கொல்லி பாக்டீரியாக்கள் வளரும். இதைப் பயிர் களின் மீது தெளித்து அது பச்சையாக உண்ணும் காய்கறியாக இருக்கும்பட்சத்தில் கடுமையான உடல் உபாதைகள் வரும். போதுமான அளவுக்கு பாக்டீரியத்தின் லோடு உள்ளே சென்றால் சாவு நிச்சயம். இத்தகைய ஆர்கானிக் உணவுகளை உண்டு அமெரிக்காவில் பல சாவுகள் நிகழ்ந்திருக் கின்றன. இந்த மீன் கரைசலுக்கும், செப்டிக் டேங்க் கழிவின் கரைசலுக்கும் டெக்னிக்கலி பெரிய வேறுபாடு கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

விதைகளே பேராயுதம் என அருமையான Caption போட்டுக்கொண்டு, எதிலுமே பதிவு செய்யப் படாத நிழல் அமைப்புகள் நாட்டின் Genetic Diversity யை யாருக்காகக் காட்சிப்பொருளாக்குகின்றன என சிந்திக்க வேண்டும். இந்த தேசிய, சர்வதேச மாஃபியா கும்பலுக்கு நம்மாழ்வார் கோஷ்டிதான் உள்ளூர் ஏஜெண்டு. அதன் துணை ஏஜெண்டுகள் பல்வேறு பெயர்களின் தமிழகம் முழுவதும் பல்வேறு பெயர்களில் கடைவிரித்து ஓடுமீன் ஓட, உறுமீன் வரும் வரைக்கும் காத்திருக்கிறார்கள். வடக்கே ஆரம்பித்து தமிழகம் வரை அலசிப்பார்த்து விட்டார்கள். இனி இலங்கை, மாலத்தீவு, மொரீஷியஸ் என விதைத் திருவிழாக்கள் நீளும். குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

## திருப்பூர் மணிகண்டன் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார்

காட்டாறு குழுவின் மிக முக்கிய செயல்வீரர், எம்.ஆர்.இராதா கலைக்குழுவின் ஒருங்கிணைப் பாளர் திருப்பூர் ஜீவா நகர் தோழர் மணிகண்டன் அவர்கள் கடந்த 29.03.17 அன்று காலை விபத்துக் குள்ளானார். அவரது அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவத்திற்காக நிதிவேண்டி சமூகவலைத் தளங்களில் தகவல் வெளியிட்டோம்.

கொள்கைச் சொந்தங்களின் உடனடி உதவியால் தோழர் மணிகண்டன் கடந்த 25.04.17 ல் வீடு திரும்பினார். காட்டாறு, கருந்திணை என்று நேரடியாக எம்மோடு தொடர் புடைய தோழர்களை விட நாங்கள் எதிர்பாராத பல அமைப்புகளின் தோழர்கள், நண்பர்கள், எந்த அமைப்பையும் சாராத ஆதரவாளர்கள் என பலரும் நிதி அளித்து உதவினார்.

தி.க, தி.வி.க, த.பெ.தி.க, தோழர்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும், வழக்கறிஞர்களும் தோழர் மணிகண்டனை நேரில் சந்தித்து உடல் நலனை அறிந்தனர். இரத்த சொந்தங்களைவிட, கொள்கைச் சொந்தங்களே வலிமையானது என்பதை நிரூபித்த அனைவருக்கும் காட்டாறு இதழ், கருந்திணைக் குடும்பங்களின் நன்றியினைத் தெரிவிக்கிறோம்.

அறிவிப்புக் கொடுத்த ஒரு வாரத்திற்குள்ளேயே ரூ.1,08,000 நிதி சேர்ந்தது. இனி மருத்துவ நிதியாக தொகை அனுப்ப வேண்டாம். காட்டாறு நன்கொடை யாக அனுப்பலாம்.

| | |
|---|---|
| இராம்குமார், தி.மு.கழகம், திருப்பூர் | 10,000 |
| பா.சுந்தரவாணன், தஞ்சை | 5,000 |
| பேராசிரியர் மணிமேகலை, திருச்சி | 5,000 |
| ச.சரஸ்வதி, பொள்ளாச்சி | 3,000 |
| காந்தி, கடத்தூர், கணியூர் | 2,000 |
| முத்துக்குமார் | 2,000 |
| வழக்குரைஞர் எம்.ஆர். பொற்கொடி, மதுரை | 2,000 |
| IMPS/ 711617168 | 2,000 |
| பிரபு, தங்கவேல், ஒட்டன்சத்திரம் | 1,500 |
| சண்முகநாதன், தி.இ.த.பேரவை | 1,000 |
| சந்திரகிரி, சென்னை | 1,000 |
| கோபாலகிருஷ்ணன், திருப்பூர் | 1,000 |
| ஜெகநாதன் (பொ.ந), பொள்ளாச்சி | 1,000 |
| வாலாசவல்லவன், சென்னை | 1,000 |
| சண்முகசுந்தரம், பொள்ளாச்சி | 1,000 |
| த.லெனின், சி.பி.அய் கட்சி, சென்னை | 1,000 |
| கணேஷ், ஆனைமலை ( போட்டோஸ்) | 500 |
| தி.கருப்புசாமி, தில்லைஏஜன்சிஸ், பொள்ளாச்சி | 1,000 |
| ஜெயபாண்டியன், பல்லடம் | 1,000 |
| இரமேஷ், சேவூர் | 1,000 |
| நா.முத்துக்குமார், பல்லடம் | 1,000 |
| இராஜேந்திரன், தையலகம், பொள்ளாச்சி | 1,000 |
| முகமதுகனி, பாகனேரி | 1,000 |
| அய்யப்பன், கடத்தூர், கணியூர் | 1,000 |

பட்டியல் தொடரும்




அதி அசுரன்

# இயற்கை விவசாயத்தில்

## பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கொள்ளை

பிராமணன், பசு இவைகளைக் காப்பாற்றுவதற்காக பாக்கியஜாதிகள் (தாழ்த்தப்பட்டோர்) பொருளை வாங்காமலேயே உயிர் விட்டால் அவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும்.

*மனுசாஸ்திரம் அத்தியாயம் 10, ஸ்லோகம் 62*

பிராமணன் பசுக்களை அபகரித்தவனுக்கும், மலட்டுப்பசுக்களுக்கு சுமை எடுப்பதற்காக ( வண்டி இழுக்க, பாரம் சுமக்க, ஏர் ஓட்ட) மூக்கு குத்திய வனுக்கும் உடனடியாக பாதிக்கால்களை வெட்ட வேண்டும்.

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 8, ஸ்லோகம் 325*

*“கறவை நின்ற மாடுகளை அடிமாட்டுக்காக விற்காமல் அது வாழும் காலம்வரை அவற்றைக் காப்பாற்ற வழி செய்யவேண்டியது நம் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை - தாயாருக்குச் செய்ய வேண்டிய கடமைக்கு சமமான கடமை. பகவத் ஸ்ருணடியிலேயே தன் கன்றுக்கு வேண்டியதைவிட உபரியாக மற்றவர்களுக்கென்றும் பாலைச் சுரக்கிற பசு நமக்கெல்லாம் தாயார்தான்”.*

*- சந்திரசேகரேந்திர சங்கராச்சாரி, தெய்வத்தின் குரல், மூன்றாம் பாகம்‘திராவிடர் விவசாயம்’* என்ற தலைப்பில் பசுப்பாதுகாப்பு பற்றிய செய்திகள் எதற்காக என்றால், தற்போது புதிதாக இயற்கை விவசாயம் செய்யச் சொல்லும் பலர் மேற்கண்ட மனுசாஸ்திர வரிகளையும் சங்கராச்சாரி கனவுகளையும் தான் பேசிவருகின்றனர்.

**பார்ப்பன ஆதிக்கத்திற்கு முட்டுக்கொடுக்கும் நம்மாழ்வார்**

*“நவீன விவசாயம் என்ன செஞ்சுது? விவசாயியையும் மாட்டையும் பிரிச்சுது. மாடு கசாப்புக் கடைக்குப் போவுது; விவசாயி ஏரை விட்டுட்டான்; டிராக்டர் வந்துச்சு; கம்பெனிக்காரன் பெருக்குறான். மாடு கசாப்புக் கடைக்குப் போவுது; விவசாயி மாட்டு வண்டியை விட்டுட்டான்; பெட்ரோலும் டீசலும் இறக்குமதி ஆவுது; கம்பெனிக்காரன் பெருக்குறான். மாடு கசாப்புக் கடைக்குப் போவுது; விவசாயி ஏத்தம் இறைக்கிறதை மறந்துட்டான்; ஆழ்குழாய்க் கிணறு வந்துச்சு; மோட்டாரும் குழாயும் விக்குது; கம்பெனிக்காரன் பெருக்குறான். விவசாயி ஓட்டாண்டி ஆயிட்டான். நவீன விவசாயம் என்ன பண்ணுதுனு இப்பப் புரியுதுங்களா?”*

*2012-ல் ஐந்திணை விழா என்ற பெயரில் இயற்கை உணவுத்திருவிழா சென்னையில் நடைப்பெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இயற்கை வேளாண் அறிஞர் நம்மாழ்வார் அவர்கள் ஆற்றிய உரை,*

இது ஒரு தவறான தகவல். தமிழ்நாட்டில் எந்த கிராமத்திலும் கசாப்புக்கடைக்கு அனுப்பப்படும் மாடுகள் எவையும் ஏர் உழவோ, வண்டி இழுக்கவோ, ஏற்றம் இறைக்கவோ, பால் கறவைக்காகவோ பயன்பட்டுக் கொண்டிருப்பவை அல்ல. இவை போன்ற எந்த பணிக்கும் இலாயக்கில்லாத மாடுகள் மட்டுமே அடிமாடாகப் போகின்றன. இதனால் ஒரு சாதாரண விவசாயிக்கு இலாபமே தவிர எவ்வகையிலும் நட்டமில்லை. இயற்கை விவசாயத்துக்கு எருவைத் தரும் என்றால்கூட மேலே சொல்லப் பட்டுள்ள வேறு எந்தப் பணிக்காவது பயன்பட்டுக் கொண்டிருந்தால் கூடுதலாக சாணி நமக்கு மிச்சம். இன்றைய சூழலில் மாடு வைத்திருப்பதில் சாணி மட்டுமே இலாபமாக மிச்சமாகிறது. ஆடு, மாடு இல்லாதவன் அடைமழைக்கு ராசா என்ற பழமொழியை நாங்கள் அனுபவித்து உணர்ந்தவர்கள். அடிமாட்டுக்கு அனுப்புவதுதான், விவசாயி அடிமாடாகமல் தப்பிப்பதற்கு ஒரேவழி.

ஏர் ஊழவுக்கு கலப்பை வேண்டும். மாட்டு வண்டிக்கு வண்டியும் சக்கரமும் வேண்டும். ஏற்றம் இறைக்க கமலை, சால், பரி, தோல் வேண்டும். நம்மாழ்வார் கூறும் அனைத்தும் இன்றும் வேண்டுமானால் தச்சரும், கொல்லரும் தமது குலத் தொழிலைத் தொடர்ந்து செய்துவர வேண்டும். பரிக்கும் தோலுக்கும் சக்கிலியர் வேண்டும். சக்கிலியர்

கள் தம் குலத்தொழிலை தவறாமல் செய்து வர வேண்டும். இப்படி ஒவ்வொரு ஜாதியும் தத்தம் குலத் தொழிலை தவறாமல் செய்து வந்தால் நம்மாழ் வாரின் இயற்கை விவசாயம் நன்றாகத்தான் நடக்கும்.

பரிக்கும், தோலுக்கும் போக மிச்சமான மாட்டுத்தோல் பறைக்குப் பயன்படும். அதுவும் பறையர்களுக்குக் குலத்தொழிலை நினைவுபடுத்தும். இன்னும் விதைப்பு எந்திரம், அறுவடை எந்திரம் இவைகள் வராத கிராமங்களில் விதைப்புக்கும், அறுப்புக்கும் தாழ்த்தப்பட்ட மக்களே மிகுதியாகச் செல்கின்றனர். கதிரடிக்கும் களத்துமேடுகளில் இன்றும் ஒரு பார்ப்பானைக்கூட பார்க்கமுடியாது. இடைநிலைச்சாதிகளையும் அதிகமாகப் பார்க்க முடியாது. ஆனால் மேல்மட்டத்தில், விவசாயம் தொடர்பாகத் திட்டமிடும் இடங்களில் பார்ப்பனர் கள்தான் குவிந்துள்ளனர்.

இந்திய அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் என்ற பெயரில் அமெரிக்காவும், இந்தியாவும் ஒப்பந்தம் போட்டு, அமெரிக்க வேளாண் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இந்தியா வின் ஒட்டுமொத்த வேளாண்மையையும் ஒப்படைக் கும் முயற்சியில் எம்.எஸ்.சாமிநாதன் என்றொரு பார்ப்பனர் இருக்கிறார். அதை எதிர்க்கும் முயற்சி யிலும் பார்ப்பன நலன்களே இருக்கின்றன. சுற்றுச் சூழல் புரட்சியாளர் என்றால் அது எக்ஸ்னோரா வின் எம்.பி. நிர்மல் என்ற பார்ப்பனர் இருக்கிறார். இயற்கை விவசாயம் என்றாலும் அதிலும் பார்ப்பன வந்தனா சிவாக்கள் தான் முன்னணியில் வருகிறார் கள். கோவையில் பார்ப்பனருக்கு மட்டுமே தனியாக மின்சாரச் சுடுகாடு அமைத்துள்ள கிருஸ்ணா ஸ்வீட்ஸ், கடந்த ஆண்டு ஆர்.எஸ்.எஸ் அமைப்பு நடத்திய இந்து ஆன்மீகக் கண்காட்சியில்அரங்கு அமைத்த பார்ப்பன விகடன் குழுமம் இவை யெல்லாம் இயற்கை விவசாய ஆர்வலர்கள்.

**இந்திய தேசிய – பன்னாட்டுக் கொள்ளையை வளர்க்கும் ஆர்கானிக்**

இயற்கை விவசாயம், இயற்கை உணவு என்ற தளத்திலும் பார்ப்பன - இந்து தேசிய - பன்னாட்டுக் கொள்ளைதான் நடந்து வருகிறது. அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்டு அகில உலகமெங்கும் இயற்கை விவசாயம் பற்றி பிரச்சாரம் செய்து வருகிறது (Rodale) ரொடெல் நிறுவனம். அந்த நிறுவனத்தின் சிறப்பு விருந்தினராக அழைக்கப் படுபவர் நம்மஊரில் பரம்பரை பரம்பரையாக இயற்கை விவசாயம் செய்துவரும் குப்புச்சாமியோ, முனுசாமியோ அல்ல. பார்ப்பன டாக்டர் வந்தனா சிவாவைத்தான் அழைக்கிறார்கள். சங்கராச்சாரியும், இராம கோபாலனும் கனவுகாணும் சமுதாயத்தை - அமெரிக்காவின் ரொடெல் நிறுவனம் கண்டங் களில், 65 நாடுகளில் செயல்படுத்தி வருகிறது.

ரொடெல் என்ற வெளிநாட்டு நிறுவனம் மட்டுமல்ல. உலகம் முழுதும் உணவு மற்றும் நுகர்வுப் பொருட்கள் விற்பனையில் பலஇலட்சம் கோடிகளை முதலீடுசெய்து, கொள்ளை அடித்து வரும் ஒரு சில பன்னாட்டு நிறுவனங்கள் தான் தற்போது இந்த ஆர்கானிக் உணவுப்பொருட்கள் விற்பனையிலும் கொடிகட்டிப் பறக்கின்றன.

GREEN & BLACK'S, COLEMAN NATURAL, BOLTHOUSE FARMS, STONYFIELD FARM, BEAR NAKED, EARTHBOUND FARMS, FOOD SHOULD TASTE GOOD, KASHI, NAKED JUICE, APPLEGATE FARMS, HONEST TEA, ANNIE'S HOMEGROWN போன்ற ப்ராண்டுகள் அனைத்தும், இயற்கை உணவுப் பொருட்களின் ப்ராண்டுகள் தான். ஆர்கானிக் ப்ராடக்டுகள் தான். இந்த ப்ராண்டுகளின் உரிமையாளர்கள் பெப்சி, கோக், கெல்லாக்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள்தான்.

வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமல்ல; இந்தியா தேசிய முதலாளிகளால் தொடங்கப்பட்டு அகில உலகமெங்கும் கிளைபரப்பி, அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்களோடு பல ஒப்பந்தங்களை மேற்கொண்டு வரும் சில நிறுவனங்களையும் பார்ப் போம். ஃப்யூச்சரா Futura, Organic Industries Pvt Ltd, Chambal Fertilizers and Chemicals, Vam Organic Chemicals, Schenectady India, Atul Ltd of Lalbhai Group, Deepak Fertilisers and Petrochemicals

இந்தியா மற்றும் உலகம் முழுவதும் ஆர்கானிக் ஆடைகள் என்ற பெயரில் பெரும் வணிகக் கொள் ளையை நடத்தி வரும் இந்திய தேசிய நிறுவனங்கள் Indigreen, No nasties, Forty Red Bangles, Samtana, Tvach, Anokhi, UV & W, Bhu:sattva, Do you speak Green, Ethicus, Chlorophile

இந்தியா மற்றும் உலகம் முழுவதும் ஆர்கானிக் உணவுகள் என்ற பெயரில் வணிகக்கொள்ளை நடத்தி வரும் நிறுவனங்கள் Down to Earth, Arya Farm, Abali Organic Tea, Deha Organic, Grenera, Woods and Petals, Vedantika Herbals, Organic India, Sunrise, Nature Organic, Natureland Organics.

மேற்கண்டவை போன்ற பன்னாட்டு நிறுவனங் கள்,இந்திய தேசிய வணிகக்கொள்ளை நிறுவனங் களால் கிடைக்கும் ஏற்றுமதி வாய்ப்புகளையும், பெருநகரங்களில் பெரும் பொருட்செலவில் இயங்கும் வணிக நிறுவனங்கள் தரும் வணிக வாய்ப்பு களையும் நம்பித்தான் இங்கு இயற்கை விவசாயம் பெருமளவில் நடக்கிறது.

இயற்கை விவசாயம், ஆர்கானிக் வாழ்க்கை, பாரம்பரிய வாழ்க்கை என்றால் எளிமையானது - இயல்பானது - சுரண்டல்களுக்கு எதிரானது என்றெல்லாம் பேசிவந்த சில இயற்கை ஆர்வலர் களும், சுற்றுச்சூழல்காரர்களும், பார்ப்பன விகடனின் ஆஸ்தான லேகிய வியாபாரிகளும் இந்த ஆர்கானிக் வணிகக் கொள்ளைக்கு வழிவகுத்ததோடு, ஆரியப் பார்ப்பனிய ஆதிக்கத்திற்கும் வழி அமைத்து விட்டார்கள்.

யாரோ சிலர் இயற்கையாக உண்டு நீண்ட காலம் மற்றவர்களை அடக்கி வாழ - பெரும்பான்மை மக்கள் எதற்காக பள்ளனாக, பறையனாக, சக்கிலி யனாக, தச்சனாக, ஆசாரியாக தொடர்ந்து இழி வோடு வாழவேண்டும்? சக்கிலியன் செருப்புத் தைத்துக் கொண்டே இருக்க வேண்டும். பள்ளர்கள் வயலில் கிடந்தே சாகவேண்டும். பறையர்கள் பறை யடித்துக் கொண்டும் பறையர்களைவிட உயர்ந்தவர்

கள் என்று கருதிக்கொண்டிருக்கும் மக்களுக்கு பண்ணை அடிமையாக உழைத்துக் கொண்டும் இருக்கவேண்டும். படிக்கக்கூடாது, வேறு தொழில் களில் இறங்கி பொருளீட்டக்கூடாது என்று மனு சாஸ்திரக் காவலர்களாக வாழ்ந்து வரும் ஆதிக்க ஜாதி மக்களுக்கும் இயற்கை விவசாயப் பிரச்சார பீரங்கிகளின் உள்நோக்கத்துக்கும் என்ன வேறுபாடு?

இரசாயன உரங்களையும், கொடிய பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தியதால்தான் தமிழ்நாட்டில் விவசாயம் அழிந்தது என்று இயற்கை ஆர்வலர்கள் கூறுகிறார்கள். ஆனால் அதற்கு முன்பு - செயற்கை உரங்கள் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டு விவசாயிகள் பெரும் பணக் காரர்களாக இருந்தார்களா? அக்ரஹார மாமாக் களைப் போல வயிறு வளர்த்துக்கொண்டி ருந்தார் களா? "காடு வௌஞ்சென்ன மச்சான் நமக்கு கையுங் காலுந்தானே மிச்சம்" என்ற நிலைதானே இருந்தது? "உழுதவன் கணக்குப் பாத்தா ஒளக்குக் கூட மிஞ்சாது" என்ற நிலைதானே இருந்தது?

மேலும், அரசாங்கத்தின் கொள்கைகள் விவசாயத்திற்கு எதிராகவே இருக்கின்றன. அமெரிக் காவில் விவசாயத்திற்கும் பலகோடி மானியம் அளிக்கப்படுகிறது. கடந்த 2002 ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக்கா, தமது விவசாயிகளுக்கு 3890 பில்லியன் டாலர் அளவுக்கு மானியம் கொடுத் துள்ளது. குறைந்த வட்டியில் கடன் வழங்குகிறது. விவசாயப் பொருட்கள் ஏற்றுமதிக்கு மானியம் வழங்குகிறது.

இப்படியெல்லாம் தமது நாட்டு விவசாயத் துக்கு மானியங்களையும், உதவிகளையும் வழங்கும் அமெரிக்கா - தனது கட்டுப்பாட்டில் உள்ள உலக வங்கிகள், சர்வதேச வளர்ச்சி வங்கிகள் மூலமாக இந்திய விவசாயிகளுக்கு மானியத்தை நிறுத்துகிறது. இலவச மின்சாரத்தை ரத்துசெய்யப் பணிக்கிறது. இந்தச் சர்வதேசச் சிக்கல்களைக் கணக்கில் கொள்ளாமல், இரசாயன முறையை நீக்கிவிட்டால் விவசாயம் செழிக்கும் எனப் பரப்புவது விவசாயிகளை முட்டாளாக்குவதாகும்.

### நிலப்பிரபுத்துவம் அல்ல; இந்துத்துவம்

இந்தியா மிகநீண்டகாலமாகவே உற்பத்தித் துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதில்லை. குறிப்பாக விவசாய உற்பத்திக்கு போதிய நிதி ஆதாரங்களைத் தருவதில்லை. அதேசமயம் உற்பத்தி சாராத நிர்வாகத்துறைக்கு கோடிக்கணக்கில் மானியங்களை வழங்கி வருகிறது. ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் போன்ற நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக பல ஆயிரம் கோடிகளை ஒதுக்குகிறது மத்திய அரசு. ஆனால் இந்த நிறுவனங்களில் படித்து முடிப்பவர் கள் எவருமே இந்தியாவில் பணிபுரிவதே இல்லை. அமெரிக்கா விலும், ஐரோப்பிய நாடுகளிலும் முக்கியப் பதவிகளுக்குப் போய்விடுகின்றனர். இவர்களில் 90 சதவீதம் பார்ப்பனர்கள்.

ஆக, வெளிநாடுகளில் நிர்வாகிகளாகப் போகிறவர்களுக்கும், இந்தியாவில் வெறும் நிர்வாகி களாக, பெரும் பதவிகளை அலங்கரிப்பவர்களுக்கும் ஒரு நபருக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி உதவி செய்யும் இந்திய அரசு - விவசாயிக்கு, விவசாய உற்பத்திக்கு உரிய நிதிஒதுக்கீட்டை வழங்கு வதில்லை. நாட்டின் உற்பத்தியில் எந்தப் பங்கும் வகிக்காத சினிமாத்துறையை ஒரு தொழிலாக ஏற்று சினிமா எடுக்க பலகோடி ரூபாய்களைக் கடனாகக் கொடுக்கும் தேசியமயமாக்கப்பட்ட - தனியார் வங்கிகள் விவசாயத்திற்கு கடன் கொடுப்பதில்லை.

2017 ஜூலை 1 முதல் நாடுமுழுவதும் அமல்படுத்தப்பட உள்ள ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையில் சினிமாத் துறைக்கு 28 சதம் வரி விதிக்கப்பட்டது. சினிமாத்துறையில் உள்ளவர்கள் அறிக்கை விட்ட உடனேயே அதை 18 சதமாகக் குறைத்துவிட்டது இந்தியப் பார்ப்பன அரசு. கேரளாவில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளின் அரசோ ஜி.எஸ்.டி யிலிருந்து சினிமாவுக்கு முழு விலக்கே அளித்துவிட்டது. ஆனால், மத்திய அரசுக்கு எதிராக, கடன் தொல்லையிலிருந்து விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டு மென்று பல மாதங்களாக, நிர்வாணமாகக்கூடப் போராடி வரும் விவசாயி களுக்கு கடன் தொகையை ரத்துசெய்து அறிவிக்க வில்லை.

இப்படி உற்பத்திக்கு மரியாதை இல்லாமல் உற்பத்தி சாராத துறைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்பது இந்தியாவில் 2000 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகிறது. உலகில் வேறெங்கும் இல்லாத வகையான பொருளாதாரமுறை இது. இந்தப் பொருளாதார முறையை பொருளாதார வல்லுநர் ஆர்.எஸ்.ராவ் பார்ப்பனிய வளர்ச்சிப்பாதை (Brahmanical Path of Develepment) என்கிறார். உலகின் மிக முக்கிய பொருளாதார வல்லுனர்கள் இந்துப் பொருளாதார வளர்ச்சி விகிதம் (Hindu Economic Rate of Growth) என்கின்றனர். இந்த பார்ப்பனிய வளர்ச்சிப்பாதையில் மாற்றம் வராமல் எந்த முறை விவசாயமும் விவசாயிக்கு பலன் அளிக்காது.

### இந்துமதத்தால், உபரி உற்பத்தி நாசம் – முடக்கம்

அப்படியே ஒருவேளை விவசாயத்தில் இலாபம் வந்துவிட்டாலும் - உபரியாகப் பணம் கிடைத்தாலும் அந்தப் பணம் எப்படிச் செலவாகிறது? விவசாயத்தை மேம்படுத்தல் - விவசாய ஆராய்ச்சியில் ஈடுபடுதல் - குறைந்த உழைப்பில் அதிக உற்பத்தியைப் பெறும் வழிகள் குறித்த ஆய்வு - விவசாயக் கண்காட்சிக ளுக்குச் சென்று புதிய தகவல்களை அறிந்துகொள்ளுதல் - புதிய தொழில் நுட்பங்களை அறிய சுற்றுலா செல்வது - இப்படித்தான் பயன்பட்டிருக்க வேண்டும்.

முன்னேறிய நாடுகளின் விவசாயிகள் தங்களது உபரி வருமானத்தை இப்படித்தான் செலவிடு கின்றனர். விவசாயம் மட்டுமல்ல அனைத்துத் துறையிலும் பொருளீட்டுபவர்கள் தங்களது உபரி வருமானத்தை ஆக்கப்பூர்வமான வழிகளில் முதலீடு செய்கின்றனர். அதனால்தான் வெளிநாடுகளில்

அரசங்கங்க நிறுவனங்களை மிஞ்சும் அளவுக்கு ஏராளமான ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாகி யுள்ளன. உலகப்புகழ் பெற்ற முன்னணிக் கல்வி நிறுவனங்கள் உருவாகின. உற்பத்தி பெருகுகிறது.

ஆனால் நம் நாட்டு விவசாயி வருமானத்தை என்ன செய்கிறான்? வருமானம் வந்த நேரத்தில் காளியம்மன், மாரியம்மன் பண்டிகை - நோம்பி - கிடா வெட்டு - காதுகுத்து - மஞ்சள் நீராட்டுவிழா - திருமணம் - குலதெய்வ வழிபாடு - கிராமத் திருவிழா - யாகங்கள் இவைகளின் பேரால் உபரி வருமானத்தை நாசம் செய்கிறான். கோவில் கும்பாபிசேகம் - கோவிலைப் புதுப்பிப்பது - புதிய கோவில் கட்டுவது என வருமானத்தை முடக்குகிறான். இப்படி விவசாயிக்குத் தப்பித்தவறிக் கிடைக்கும் பணமும், உபரி உற்பத்தி நாசம், உபரி உற்பத்தி முடக்கம் என்ற இரண்டு வழிகளிலும் வீணாகிறது.

இப்படி உபரி உற்பத்தியை நாசமாக்கும் பண்பாடு இந்துப்பண்பாடு, இந்துமத உளவியல். ஒரு இந்துவினுடைய இயல்பான வாழ்க்கை. இந்த இந்து மதப் பண்பாட்டிற்கு எதிரான புரட்சி நடந்தால் ஒழிய விவசாயிக்கோ - விவசாயத்தை நம்பியுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கோ விடிவில்லை. இந்த பார்ப்பனிய வளர்ச்சிப் பாதை, இந்துப் பொரு ளாதார வளர்ச்சி விகிதம் இவை மாற வேண்டும். இந்தியப் பொருளாதாரத்தையே முடக்கும் மதவழிச் சிந்தனைகள் மாறவேண்டும். இவைகளிலெல்லாம் மாற்றம் கொண்டு வருவது பற்றிப் பேசாமல் இரசாயன உரத்திற்குப் பதிலாக மாட்டுச்சாணி - பூச்சிக் கொல்லிக்குப் பதிலாக மாட்டு மூத்திரம் எனப் பேசி வருவது உரிய பலனைக் கொடுக்காது.

**இயற்கை உரத்திலும் தீண்டாமை**

அதிலும் ஒரு பார்ப்பனச் சிந்தனை என்னவென்றால் பசுமாட்டுச்சாணிக்கு, பசு மாட்டு மூத்திரத்துக்கு உள்ள சக்தி எருமைச்சாணிக்கும், மூத்திரத்திற்கும் இல்லையா? பன்றிக் கழிவுகளுக்கு இல்லையா? ஆட்டுப்புழுக்கைக்கு இல்லையா? கோழியின் கழிவுக்கு இல்லையா? ஏன் இதுவரை எந்த இயற்கை விவசாயப் பிரச்சாரகரும் பன்றிகளைக் கொல்ல வேண்டாம், ஆடுகளைக் கொல்ல வேண்டாம், கோழிகளைக் கொல்ல வேண்டாம் எனப் பிரச்சாரம் செய்யவில்லை? ஆடு, கோழி, பன்றி களைக் காக்க வேண்டும் என சங்கராச்சாரி சொல்லவில்லை. மனுசாஸ்திரம் சொல்லவில்லை.

இதையெல்லாம் விட மனிதக் கழிவுக்கு அதிக ஆற்றல் இருக்கிறதே. அதை ஏன் பயன்படுத்தச் சொல்லவில்லை? கி.பி.1880 களில் இங்கிலாந்து ராணி இந்திய விவசாயமுறை பற்றி அறிந்து அறிக்கை கொடுக்குமாறு ஒருவரை அனுப்பிவைத்தார். அவர் பெயர் ஜான் அகஸ்டன் வால்கர். அவர் ஓராண்டு இந்தியா முழுவதும் சுற்றி அலைந்து, ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுத்தார். இந்திய விவசாய முறையின் பெருமைகளைப் பேசும் அந்த அறிக்கை முக்கியமாகச் சொன்னது இது.

“பயிர் சாகுபடியைப் பொறுத்தவரை ஒரே ஒரு குறைபாட்டைத்தான் பார்க்கிறேன். மனித மலத்தை எருவாகப் பயன்படுத்துவது இந்தியாவில் காண முடியவில்லை. அதற்குக் காரணம் உள்ளது. நிலம் மேல் ஜாதிக்காரனிடம் இருக்கிறது. கீழ்ஜாதிக் காரர்கள் தங்கள் நிலத்தில் மலம் கழிக்க மேல்ஜாதிக் காரர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதனாலேயே மனித மலம் இன்னும் எருவாகப் பயன்படவில்லை.” என்கிறார்.

இன்று நிலைமை ஓரளவு மாறிவிட்டது. செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகனங்கள் ஏராளமாக வந்துவிட்டன. ஒரு ஏக்கருக்கு ஒரு டேங்க் எனக் கொட்டலாமே? அதுபற்றி ஏன் பசுக்காவலர் கள் யோசிக்கவே இல்லை? ஏனென்றால், மனிதமலப் பயன்பாடு பற்றி மனுசாஸ்திர - இந்து வேதங்களில் சொல்லப்படவில்லை. பார்ப்பன அஜெண்டாக் களில் அது இல்லை.

அமெரிக்காவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து இங்கேயே உள்ள நமது செல்வமான நீர்வளத்தைச் சுரண்டி நம்மிடமே ஒரு லிட்டர் நீருக்கு 20 ரூபாய் என விலைநிர்ணயம் செய்யும் அதிகாரம் - உரிமை, தமிழ்நாட்டு பார்ப்பனப் பெண்ணான இந்திரா நூயி தலைமையில் உள்ள பெப்சி நிறுவனத்திற்கு இருக்கிறது. ஆனால் ஆறுமாதம் வியர்வை சிந்தி, பட்டினி கிடந்து, உழைத்து களம் சேர்த்த நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை யாரிடம் இருக்கிறது? அது இயற்கை விவசாயம் என்றாலும், செயற்கை விவசாயம் என்றாலும் வியாபாரிகளின் கையிலும், தரகர்களின் கையிலும் தானே இருக்கிறது?

இயற்கை விவசாயமோ, இரசாயன விவசாயமோ, மரபணு மாற்ற விவசாயமோ - முறை எதுவாக இருந்தாலும் ஒரு விவசாயிக்கு, தான் உற்பத்தி செய்யும் விளைபொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை வேண்டும். தான் விளை வித்த பொருளுக்கான விலையை, தானே முடிவு செய்யும் அதிகாரம் விவசாயிக்கு எப்போது வருமோ - எந்த விவசாய முறையில் வருமோ அந்த விவசாய முறையைத்தான் நாம் வரவேற்க வேண்டியுள்ளது.

ஜாதிமுறையைக் காப்பாற்றாத - பார்ப்பன நலன்களுக்கு எதிரான - பன்னாட்டுத் தரகு முதலாளி களுக்கு எதிரான - தரகர்கள் இல்லாத - இயற்கை உரங்களில் வர்ணாஸ்ரமம் பார்க்காத - விவசாயம் என்பதே நமக்குத் தேவை. இவை குறித்து பல கோணங்களில் - விரிவான விவாதங்கள் தொடங்க வேண்டும் என விரும்புகிறோம்.


Source:


1.https://www.forbes.com/sites/bethhoffman/2013/05/25/who-owns-organic-brands-and-why-you-should-care/#c3adaf66efe5

2.http://www.chicagotribune.com/ct-organic-food-brands-20150506-htmlstory.html

3.http://mentalfloss.com/article/72624/12-natural-and-organic-brands-owned-big-food

Make it compulsory that women should have their consent in marriage and that they should earn independently .To conform and issue certificate in this regard form a separate board including advocates and police officials.





Reservation must be given for people in education and job opportunities who have undergone surgical contraception before marriage and who are childfree.

Make it compulsory to practice nuclear family culture from the time of marriage itself , saying ‘no’ to joint family system.





Punish men who do not play equal role in housekeeping, cooking and bringing up of children.

Make marital rape a punishable offense.

Owner and Publisher by : S.Vijayaragavan
Consulting Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com

# திறனாய்வு அரங்கம்

குலதெய்வ - நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ் (2017 மே மாத இதழ்)




கருத்துரை:

**தோழர் த.லெனின்**

மாநிலக்குழு உறுப்பினர்,
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

**தோழர் டான் அசோக்**

எழுத்தாளர்

**25.06.2017**
ஞாயிறு, மாலை
**5** மணி

தோழமையுடன்
காட்டாறு
97868 89325

பனுவல் புத்தக நிலையம் , திருவான்மியூர், சென்னை

# ஜாதி மறுப்புத் திருமண வரவேற்பு

கும்பகோணம் எம்.சின்னதுரை, எம்.பத்மினி இணையரின் மகள்

பேராசிரியர் **சி.கனிமொழி** அவர்களும்

குளித்தலை வையாபுரி - வெள்ளையம்மாள் இணையரின் மகனும்
திராவிடர் விடுதலைக் கழகத் தோழருமான

**வை.சத்தியசீலன்** அவர்களும்

தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஜாதி கடந்த வாழ்க்கைத் துணை
ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்தும் விழா



09.07.17 ஞாயிறு காலை 10 மணி
ஹோட்டல் இராஜா கார்டன்
இரயில்வே ஜங்சன் எதிரில், திருச்சி.

ஜாதி, மத ஒழிப்பில் அக்கறை கொண்டோர் அவசியம் வருக.
வருகையை முன்கூட்டியே தெரிவியுங்கள்

ஒருங்கிணைப்பு:
காட்டாறு ஏடு
தொடர்புக்கு: 97880 64477